# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 33 | ஏப்ரல், 25, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


# 21 கோரிக்கைகளை வெல்வோம்

## புரட்சிகர ஊர்வலத்தில் கலந்துகொள்வீர்

நாடு நல்வாழ்வு பெற, தொழிலாளர்—உழைக்கும் பெருமக்களின் ஆட்சி அமைக்க, உறுதியுடன், திட்டத்துடன் செயல்படும் இலங்கையின் புரட்சிகர அணிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம் ஆகியவை இவ்வாண்டு கூட்டு மேதினம் நடத்துகின்றன.

டிமெல் பார்க்கில் ஆரம்பிக்கும் புரட்சிகர அணிகளின் கம்யூனிஸ்ட் ஊர்வலத்துக்கு இரு பிராதான கிளை ஊர்வலங்கள் கிராண்ட்பாஸ் சிலோன் டிரேடிங் கம்பெனிக்கு அண்மையில் இருந்தும், வெள்ளவத்தை ஆலையிலிருந்தும் வரும்.

21 கோரிக்கைகளை வெல்லவும், தொழிலாளர் விரோதச் சக்திகளைத் தொலைக்கவும் கம்யூனிஸ்ட் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து தமது பணியைச் செய்யுமாறு அனைவரையும் நாம் அழைக்கின்றோம்.

# தொழிலாளர் போராட்டத்திற்கு துரோகமா?

# கோரிக்கைகள் சமர்ப்பிக்க ஏன் இந்த தாமதம்?

**தொழிலாள வர்க்கத்தின் பொதுக் கோரிக்கைகள் இருபத்தொன்றையும் அரசாங்கத்துக்குச் சமர்ப்பியாது தாமதம் செய்வது ஏன்? இன்று தொழிலாளர் மத்தியில் எழுந்துள்ள முக்கிய கேள்வி இது.**

கடைசியாக நடைபெற்ற தொழிற்சங்க கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் இணைந்துள்ள தொழிற்சங்கங்கள் கோரிக்கைகளை அரசாங்கத்துக்கும் முதலாளிமார்களுக்கும் உடனடியாகச் சமர்ப்பிப்பதை பின்போடவேண்டுமெனக் கோரியுள்ளன. மற்றைய தொழிற்சங்கங்கள் இதனை எதிர்த்துள்ளன.

ஓராண்டு காலத்துக்கு மேலாகத் தயார் செய்யப்பட்ட 21 கோரிக்கைப் போராட்டத்தைப் பின்போட்டுக் காட்டிக் கொடுப்பதற்கும், சென்ற காலத்தில் தொழிற்சங்கப் போராட்டங்களை எதிர்த்த அரசாங்கத்தில் சேர இடதுசாரி முன்னணித் தலைவர்கள் முயற்சியெடுப்பதற்கும் தொடர்புண்டா?

ஸ்ரீ லங்கா அரசாங்கத்துக்கும், இடதுசாரி முன்னணிக்கும் முடிச்சுப்போடும் முயற்சி பல்வேறு கட்டங்களைத் தாண்டியுள்ளது.

முதலில், கொள்கை, நோக்கம், நேர்மை எதுவுமேயற்ற தனிப்பட்ட இடதுசாரித் தலைவர்களை அரசாங்கம் அணுகியது. இச் சந்தர்ப்பவாதத் தலைவர்களும் ஒருவருக்கொருவர் தெரியாது பிரதம மந்திரியைச் சந்தித்தனர்.

பின்னர் தலைவர்களின் இக் கபட நாடகத்தை குறிப்பாக இடதுசாரிக் கட்சிகளின் அங்கத்தவர்களும், பொதுவாக தொழிலாள வர்க்கமும் கடுமையாக எதிர்த்ததைக் கண்டதும், வலதுசாரிச் சக்திகள் திரும்பவும் பலமுறும் பேரபாயத்தைத் தடுத்து நிறுத்த இத்தகைய நடவடிக்கை அவசியம் என நாக்கில் நரம்பின்றி வாதிட்டனர்.

இன்று எதிர்ப்பு மேலும் கூடவே இந்த கொள்கையும் கட்டுப்பாடுமற்ற தலைவர்கள் சில நிபந்தனைகள் பற்றிக் கதைக்க ஆரம்பித்துள்ளனர்.

இவர்களிடையே தான் எத்தனை விதமான கருத்துக்கள்?

குறைந்தபட்சத் திட்டத்துக்கு இசைந்தால் அரசாங்கத்துடன் சேரலாம் என்கின்றது ஒருபகுதி. இடதுசாரி ஐக்கிய முன்னனித் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் சேரலாம் என்கிறது இன்னொரு பகுதி. எதுவித நிபந்தனையுமின்றியே சேரலாம் என்கிறது இன்னொருபகுதி.

மறு பக்கத்தில், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் இடதுசாரிகளுடன் சேரவே கூடாது என்கின்றனர். இன்னொரு பிரிவினர் இடதுசாரிகளுடன் சேரலாம், பிலிப்புடன் சேரக் கூடாது என்கின்றனர்.

பிரதம மந்திரி இடதுசாரியினரின் சில கருத்துக்களைத் தான் ஏற்றுக்கொள்வதாகவும், ஆனால் அதுபற்றி வெளிப்படையாக அறிக்கை விடத் தயாராகவில்லை எனவும் சில இடதுசாரித் தலைவர்களிடம் கூறியதாக அறியவருகின்றது.

எப்படியிருந்தாலும் இடதுசாரி ஐக்கிய முன்னணித் திட்டத்தை அமுல் படுத்த,இடதுசாரி ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்குச் சக்திகளும் ஒன்று சேர்ந்தால் அது வரவேற்கக் கூடியது.

பிற்போக்காளர்களை எதிர்த்தும், அடிப்படையான சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் முறையில்செயல்படாதும் தேங்கிநிற்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் 'மத்திய கொள்கையை' ஆதரிப்பதன் மூலம் வலதுசாரி ஆபத்தை ஒழிக்க முடியாது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்குச் சக்திகளும்ஒன்று திரண்ட புரட்சிகர முன்னணியின் மூலமே வெளிநாட்டு ஏகாதிபத்திய வாதிகளையும் உள்நாட்டுப் பிற்போக்கு வாதிகளை எதிர்த்துப் போரிடவும், ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத கடமைகளைப் பூரணமாக்கவும் முடியும்.

இத்தகைய முன்னணியின் தலைமை தொழிலாளி வர்க்கத்தினுல் எடுக்கப்படல் வேண்டும் என்பதை நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். ஆகவே இடதுசாரி ஐக்கிய முன்னணித் திட்டத்தின் ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோதக் கடமைகளைச் செயல்படுத்த இடதுசாரி ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்கு சக்திகளும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில்ஐக்கியமுற்ருல் அதுஆதரிக்கப்பட வேண்டியதாகும். அதுவே எமது நோக்கமுமாகும்.

ஆனல் ஒரு கேள்வி. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்கு சக்திகளுடன் கொள்கை ரீதியில் - வேலைத் திட்ட அடிப்படையில் சேருதல் வேண்டும் என முன்னணித் தலைவர்கள் தற்பொழுது கூறுவது எவ்வளவிற்கு உண்மையானது? அரசாங்கத்தில் சேர்வதற்கு அவர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததால் அரசாங்கத்தில் சேரும் ஒரு தந்திரமாக எழுந்ததா? இவர்களின் இறந்த கால சரித்திரத்தை தெரிந்துகொண்ட படியால் தான் நாம் இக் கேள்வியை எழுப்புகின்ருேம்.

மேற்கூறிய சரியான கொள்கையை நாம் நெடுங்காலமாக முன்வைத்து வந்துள்ளோம். இதற்காகத்தான் அவர்கள் எங்களை வெறுத்து எதிர்த்தனர்.

இன்று நமது நாட்டில் தோன்றியுள்ள அரசியல் நெருக்கடியில் ஏற்படக் கூடிய போராட்டங்களில் நாட்டை முன்னெடுத்துச் செல்லக் கூடிய கொள்கைகளையும் வேலைத் திட்டத்தையும் நாம் வரவேற்று ஆதரிப்போம்..

ஆனல் இக் கட்டத்தில் எழக் கூடிய தொழிலாளர் விரோத, சந்தர்ப்பவாதக் கொள்கைகளை எதிர்த்து நாம் உறுதியாகப் போராடுவோம்.

## யாழ் நகரில் மே தின விழா!

யாழ்ப்பாணத்தில் முன் எப்பொழுதுமில்லாத வகையில் பிரமாண்டமான முறையில் மேதினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் சகல தொழிற் சங்கங்களும், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன யாழ்பிரதேச கிளையும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டாகச் சேர்ந்து மேதினத்தைக் கொண்டாட தயாரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. ஊர்வலம் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன காரியாலயம் 16 ஸ்டான்லி வீதியிலிருந்து ஆரம்பமாகும். பொதுக்கூட்டம் குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## கவிஞர் பாரதிதாசன் மறைவு

பாரதிக்குப் பின் தோன்றிய தமிழ்க் கவிஞர்களுள் தலைசிறந்தவராகிய பாரதிதாசன் அவர்கள் ஏப்ரல் 21-ம் திகதியன்று இயற்கையெய்திய செய்தி தமிழ் பேசும் பெரும் மக்களுக்குப் பெரும் இடியாக விழுந்துள்ளது. புதுமைக் கருத்துக்கள் மூலம் சிறந்த கவிஞராகப் பரிணமித்த பாரதிதாசன் (கனக சுப்புரெத்தினம்) ஆரம்பகாலத்தில் சில வழிகளில் பாரதியையும் விஞ்சிய புரட்சிக் கவிதைகளையும்' காவியங்களையும் சமைத்தார்.

துரதிருஷ்டவசமாக வாழ்வின் இறுதிப் பகுதியில் வகுப்புவாதக் குட்டையில் வீழ்ந்த படியால் அவரின் கவிதையும் சிறப்புக் குன்றியது.

என்ருலும் தென்னிந்தியாவில் தோன்றிய ஈடிணையற்ற கவிஞர் அவர் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை. நல்ல சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தன் கவிதைகள் மூலம் விதைத்த கவிஞரின் மரணம் தமிழருக்கு ஏற்பட்ட பெரும் நஷ்டமாகும்.

## மாபெரும் பொதுக்கூட்டம்

ஏகாதிபத்திய எதிர்ப்பு உலக வாலிபர் தினம் கொண்டாடுமுகமாக

ஏப்ரல் 24-ந் திகதி

மாலை 5-30 மணிக்கு

செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெறும்

பேச்சாளர்கள்:

- பிரேமலால் குமாரசிரி,
- கே.எம்.பி. ராஜரத்தின,
- ரொபர்ட் குணவர்த்தன,
- தேஜா குணவர்த்தன,
- என். சண்முகதாசன்,
- ரத்ன தேசப்பிரிய சேனநாயக்கா

இன்னும் பலர்

கம். மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம்.

## எழுதுவினைஞர் சங்க மாநாடு

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் வருடாந்த மாநாடு மே மாதம் 30-ம், 31-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

ஏழாயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக்கொண்ட இச்சங்கம் அதன் தலைவரான டி. பி. திசநாயக்காவின் தலைமையில், தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டியை அமைப்பதிலும், பொதுக் கோரிக்கைகள் 21 ஐ உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகித்தது.

தொழிற்சங்க ஐக்கியம் சம்பந்தமாகவும் 21 கோரிக்கைகள் சம்பந்தமாகவும் சங்கம் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டி பல கிளைச் சங்கங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன என அறியவருகின்றது. மேலும், தனியொரு தொழிற்சங்க மத்தியஸ்தானத்தைக் காணும் வகையில் தொழிற் சங்க ஐக்கியத்தை ஸ்திரப்படுத்தல் வேண்டுமென அவை கோரியுள்ளன.

இத்துடன் 21 கோரிக்கைகளுக்கு எதிரானவர்கள் என வெளிப்படையாகத் தெரிந்த சில சிறுபான்மையினர் தற்பொழுதைய தலைமையை மாற்றவும், 21 கோரிக்கைப் போராட்டத்தை முறியடிக்கவும் கூட்டுச்சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அறியவருகின்றது.

**புத்துலகம் படைக்கும் மேதினம் பாரீர்!**

## தலையங்கம்

# விடுதலை செய்!

பிறேசிலில் நியாயபூர்வமான கடமைகள் செய்துகொண்டிருந்த 19 சீனப் பிரஜைகள், பிறேசில் இராணுவ ஆட்சியினுல் அநியாயமாகக் கைதுசெய்யப்பட்டு, மனிதாபிமானமற்ற கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்ற திடுக்கிடும் செய்தி எமக்குக் கிடைத்துள்ளது. பிறேசில் அதிகாரிகளின் கொடுமைகளுக்கெதிராக இந்த ஒன்பது சீனப் பிரஜைகளும் உண்ணுவிரதம் இருக்கின்றனர் என்ற செய்தி எமக்குக் கிட்டியுள்ளது.

இந்தச் சீனப் பிரஜைகள், சீனுவிலும் பிறேசிலிலும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களின் உடன்படிக்கைகளுக்கிணங்க, அங்கு வியாபாரம் செய்வதற்கும் பொருளாதார வியாபார பொருட்காட்சிக்கான ஒழுங்குகள் செய்வதற்கும், பத்திரிகைச் செய்தி அனுப்புவதற்கும் அங்கு சென்றுள்ளனர். பிரேசில் அரசாங்கத்தின் சட்டத்திற்கிணங்க விசாவும், அங்கு தங்குவதற்கான அத்தாட்சிப் பத்திரங்களும் அவர்களிடமுண்டு. பிறேசிலில் இவர்களின் நடவடிக்கைகள் பூரணமாக, சீனுவுக்கும் பிறேசிலிற்குமிடையே பொருளாதார உறவுகளை வளர்க்கவும், இருநாட்டு மக்கள் மத்தியிலும் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்ப்பதுமேயாகும்.

பிறேசில் இராணுவ அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை, சர்வதேசியச் சட்டங்களைப் பூரணமாக நிராகரிப்பதாகும். சர்வதேசியக் கடமைகளில் நின்றும் தவறுவதாகும். மனித உரிமைகளிற்குப் பங்கம் விளைவிப்பதாகும்.

இந்தப் பாரதூரமான அரசியல் சம்பவம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதலில், பிரேசில் இராணுவ ஆட்சியுடன் இணைந்த சம்பவம் என்பது தெளிவு. இத்துடன் சியாங்-காய்-ஷேக் கும்பலும், இராணுவ ஆட்சியுடன் சேர்ந்து சதிசெய்து இந்தச் சீனப் பிரஜைகளை டைவான் நகரத்திற்குக் கடத்திச்செல்ல முனைவதாகத் தெரியவருகின்றது,

சியாங்-காய்-ஷேக் கும்பலினதும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும், அவர்களின் அடிவருடிகளான பிறேசில் இராணுவ ஆட்சியினதும், இந்த அனுவசியமான பாசிச நடவடிக்கையை வன்மையாக எதிர்க்கிறேம்; கண்டிக்கிறேம்.

சீன மக்கள் குடியரசின் பிரஜைகளான இந்த ஒன்பது பேரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு நாம் வற்புறுத்துகின்றேம்.

இந்த இராணுவ ஆட்சியின் நடவடிக்கைக்கு எதிராகவும் கைதுசெய்யப்பட்ட சீனப் பிரஜைகளின் போராட்டத்திற்கு உறுதுணையாகவும் உலகிலுள்ள சகல நேர்மையுள்ள மக்களையும் குரலெழுப்பும்படி வேண்டுகிறேம்.

—தொழிலாளி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயருக்கே இழுக்கையும் அவமானத்தையும் தரும் டாங்கேயின் கடிதங்கள் பற்றிக் கட்சிக்குள் எழுந்துள்ள நிலைமையைத் தெளிவுபடுத்தும் முறையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய நிர்வாகக் குழு உறுப்பினரான தோழர்கள் எம். பசவபுன்னையா எம். பி.யும், பி. ராமமூர்த்தி எம். பி.யும் 26-3-64 வெளியிட்ட அறிக்கையை இங்கு பூரணமாகப் பிரசுரிக்கின்றேம்.

நன்றி: தீக்கதிர் 11-4-64

# கம்யூனிஸ்ட் கட்சியை காப்பாற்றுங்கள்

# ஏகாதிபத்திய ஏவலாட்களை தூக்கியெறியுங்கள்

சோர்வும், குழப்பமும், வெகுஜனப் போராட்டங்களைப் பாதிக்கும்.

அஞ்சாநெஞ்சங்களினுலும் அப்பழுக்கற்ற தேசபக்தர்களாலும் கட்டி வளர்க்கப்பட்ட கட்சி கம்யூனிஸ்ட் கட்சி.

புரட்சிகரமான தன் கட்சிக்கேற்பட்ட அபாயம் குறித்து தலைமை ஆழமான பொறுப்புமிக்க கவலைகொண்டிருக்க வேண்டும்.

மத்திய செயற்குழு அறிக்கை சந்தேகங்களைப் போக்குவதாகவோ ஏற்கக்கூடியதாகவோ இல்லை.

பம்பாயிலிருந்து வெளிவரும் ஆங்கில வாரப் பத்திரிகையான 'கரண்ட்', 1964 மார்ச் 7-ம் தேதியிட்ட தன் இதழில், எஸ். ஏ. டாங்கேயினுல் முன்பிருந்த இந்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டதாகக் கூறப்படும் சில கடிதங்களை பிரசுரித்திருந்தது; இந்தக் கடிதங்களில் எஸ். ஏ. டாங்கே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குதான் சேவை செய்யத் தயார் என்று எழுதியிருந்ததாக கூறப்பட்டது. இந்தக் கடிதங்கள் பிற்போக்காளர்களாலும், ஏகாதிபத்தியவாதிகளாலும் கள்ளத்தனமாக உருவாக்கப்பட்டவை, திருட்டுத்தனமாக தேசத்தின் சுவடி பாதுகாப்பு நிலையத்திற்குள் சொருகப்பட்டவை என்று கண்டனம் செய்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு 1964 மார்ச் 13-ம் தேதியன்று ஒரு அறிக்கையைபத்திரிகைகளில் வெளியிட்டது. நம்நாட்டின் முக்கிய ஆங்கில செய்திப் பத்திரிகை எதுவும் டாங்கேயின் கடிதங்களையோ அல்லது மத்திய செயற்குழுவின் அறிக்கையையோ பிரசுரிக்கவில்லை. ஆனுல் டெல்லியில் வெளியாகும் இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை, மத்திய செயற்குழுவின் அறிக்கை குறித்து கடுமையான விமர்சன குறிப்புகளைத் தன் மார்ச் 17ம் தேதி இதழில் வெளியிட்டது. 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகையும் 21-3-64 தேதியிட்ட இதழில் தன் முதல் பக்கத்தில் இப் பிரச்சினை பற்றி ஒரு செய்திக் கடிதத்தை வெளியிட்டது. பிரச்சினை பெரிதாகி விட்டது; நாட்டின் பல்வேறு அரசியல் வட்டாரங்களில் இப் பிரச்சினை பகிரங்கமாக விவாதிக்கப்படலாயிற்று. கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினர்களும், அனுதாபிகளும் மிகவும் குழப்பமடைந்துள்ளனர்; சோர்வடைந்துள்ளனர். உண்மையில் இப் பிரச்சினை கட்சியின் சேர்மனுன எஸ். ஏ. டாங்கேயுடன் அடங்கி விடவில்லை; மாறாக, ஒரு கட்சி முழுவதையும் பாதித்தது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தை கேவலப்படுத்த, சீர்குலைக்க, நாசமாக்க, கள்ளக் கையெழுத்து உள்பட சகலவிதமான சதித் திட்டங்களையும் மேற்கொள்வதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் விரோதிகள் தயங்குவதில்லை என்பதை நாங்கள் பூரணமாக அறிவோம். ஜினேவியவ் கடிதம், மோசடியான ரெய்ச்ஸ்டாக் விசாரணை ஆகியவையும் அவை போன்றவையும் சரித்திரத்தில் நிகழ்ந்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஒற்றர்களை நுழைப்பது, கட்சியிலுள்ள சில அரசியல் பலவீனமான நபர்களை விலைகொடுத்து வாங்கி தன் கையாட்களாக செயல்படுத்துவது போன்ற கேடுகெட்ட முறைகளைக் கையாளும் பிற்போக்கு அரசாங்களின் நடவடிக்கைகளையும் நாம் அறிவோம். இந்த சூழ்ச்சிகளையெல்லாம், சதித் திட்டங்களையெல்லாம் சமாளித்து கம்யூனிஸ்ட் இயக்கம் வெற்றிகாண முடிந்துள்ளது; மார்க்ஸிஸம்-லெனினிஸம் என்ற உறுதியான அடிப்படையின் மீது நின்றுகொண்டு இந்த சூழ்ச்சிகளையும், சதி வேலைகளையும் மோசடிமிக்க கட்டுக் கதைகள் என்பதை நிரூபிப்பதற்கு கம்யூனிஸ்ட் இயக்கத்தால் முடிந்தது. அதேபோல், தன்னுடைய புரட்சிகரமான உஷார்த் தன்மையினுல், தன் அணிகளில் உள்ள எதிரி ஏஜண்டுகளை கண்டுபிடித்து அப்படிப்பட்ட கேவலமான நபர்களைத் தங்கள் அணிகளிலிருந்து வெளியேற்றுவதற்கும் கம்யூனிஸ்ட் கட்சியினுல் முடிந்தது.

ஆனுல் எஸ். ஏ. டாங்கே பற்றிக் கூறப்பட்டுள்ள ஆழமானதும், திட்டவட்டதானதுமான குற்றச் சாட்டுகளைப் பற்றி—அதுவும் ஏராளமான விபரங்களுடன் அக் கடிதங்கள் பற்றி தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கும் பொழுது, அத்துடன் அக் கடிதங்கள் தேசத்தின் சுவடி பாதுகாப்பு நிலையத்தில் இருக்கின்றன என்று திட்டவட்டமாகக் கூறப்படும் பொழுது—அக் கடிதங்கள் பற்றி மத்திய செயற்குழு சுற்றிவளைத்துக் கூறும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒப்புக்கொள்ளத் தக்கதாகவோ, சந்தேகங்களைப் போக்கத்தக்கதாகவோ இல்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களாலும், சிறந்த தேச பக்தர்களாலும் கட்டி வளர்க்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை தன்னுடைய புரட்சிகரமான ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள அபாயம் குறித்து ஆழமான, பொறுப்புமிக்க கவலை கொள்ளவேண்டும். இப் பிரச்சினை பற்றி விசாரிக்கும்படி மத்திய நிர்வாகக் குழுவையும், கட்சியின் தேசியக் கவுன்சிலையும் கோருவதற்கு எஸ். ஏ. டாங்கே தானுகவே முன்வந்திருக்க வேண்டுமென்றும், பிரச்சினையை பூரணமாக ஆராய்ந்தறிந்த பின்னர் தன் மீது களங்கம் எதுவும் கிடையாது என்பதை நிலைநாட்டிக் கொள்வதற்கு எஸ். ஏ. டாங்கே வற்புறுத்தியிருக்க வேண்டுமென்று அனைவரும் எதிர்ப்பார்ப்பார்கள். இவ்வாறு செய்வதற்கு அவர் முன்வரவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது.

இப் பிரச்சினையை மத்திய நிர்வாகக் குழு, தேசியக் கவுன்சில் ஆகியவற்றின் பரிசீலனைக்கு விடுவதற்கு மத்திய செயற்குழு மேலும் அதிக பொறுப்புடன் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக இப் பிரச்சினை குறித்து விசாரித்து உண்மையை அறிந்து கொள்வதற்கு எவ்வித முயற்சியும் செய்யாமல், மத்திய செயற்குழு, ஒரு மேலெழுந்த வாரியான 'நீண்ட' விளக்கத்தை வெளியிட்டது; இந்த விளக்கம் யாரையும் திருப்தி செய்யாது. இந்த மேலெழுந்தவாரியான, அவசர கோலமான அறிக்கையின் மூலம் கட்சி முழுவதையும் தவறுன ஒரு நிலையை ஆதரிக்க வேண்டிய இக்கட்டான சிக்கலில் மத்திய செயற்குழு சிக்கவைக்கிறது.

செயற்குழு விரும்பும் நிலையிலும் முறையிலும் இப் பிரச்சினையை விட்டுவைக்க முடியாது; அவ்வாறு விட்டுவைப்பது கம்யூனிஸ்ட் கட்சி, தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கம் ஆகியவற்றின் உண்மையான நலன்களுக்குப் பாதகமாகும் என்று கூறுவது எங்களது கடமையாகும்.

''டாங்கேயின் கடிதங்கள்'' என்பவை கள்ளத்தனமாக உருவாக்கப்பட்ட திருட்டுக் கடிதங்கள் என்று கூறுவது, தேசத்தின் சுவடி பாதுகாப்பு நிலையத்தின் மீதும், அதை நிர்வகிப்பவர்கள் மீதும், அதில் ஆராய்ச்சி பணிபுரிந்து இதே 'கடிதங்களின்' பிரதிகளை தங்கள் வசம் கொண்டிருக்கக் கூடிய சரித்திர ஆராய்ச்சியாளர்கள் மீதும் பழிபோட்டுவிட்டு தப்பிக்கப்பாக்கும் முயற்சியேயாகும். சுவடி பாதுகாப்பு நிலையத்தின் நிர்வாகிகளோ அல்லது ''டாங்கே கடிதங்களின்'' அதிகாரபூர்வமான, அத்தாட்சிபெற்ற பிரதிகளைத் தம்வசம் கொண்டுள்ள சரித்திர ஆராச்சியாளர்களோ, மத்திய செயற்குழுவின் சவாலை ஏற்றுக்கொண்டு ''டாங்கே கடிதங்கள்'' உண்மையானவை என்பதை நிருபிப்பதற்கு முன்வந்துவிட்டால், அது கட்சி முழுவதற்கும் பெரும் பாதகமாக முடிந்துவிடும் என்பது தெளிவு. எனவே, இந்தச் சூழ்நிலைமைகளின் கீழ், இப் பிரச்சினை குறித்து ஆழமாகத் துருவிப் பார்ப்பதை தவிர வேறு எந்த வழியும் எங்களுக்கு இல்லை.

இப் பிரச்சினை குறித்து நாங்கள் பூரணமாக விசாரித்தோம்; சந்தேகத்திற்கு இடமின்றி ஆராந்து உண்மையை அறிந்தோம்; இப் பிரச்சினை பற்றிக் கிடைத்த சகல ஆதாரங்களையும் கவனமாகப் பரிசீலனை செய்தோம்; இவ்வாறு செய்தபிறகு, இப் பிரச்சினை மிகவும் கடுமையான, அபாயகரமான தன்மை வாய்ந்தது என்ற உறுதியான முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம்; இப்படிப்பட்ட தன்மைவாய்ந்த இப் பிரச்சினையை, யாரோ எதிரிகள் செய்த மோசடி என்று அமர்க்களமாக வார்த்தைகளை வீசியெறிந்து ''தீர்க்கப் பார்ப்பது'' நேர்மையான எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் கிஞ்சிற்றும் அழகல்ல, முறையல்ல. 1924-ம் வருடத்தில் ஜெயிலிலிருந்து டாங்கே எழுதியதாக குறிப்பிடப்படும் மூன்று கடிதங்கள் டாங்கேயின் சொந்தக் கையெழுத்தில் இருக்கின்றன என்பதையும் இதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடம் கிடையாது என்பதையும் நாங்கள் மிக உறுதியாக அறிந்துள்ளோம்; இத்துடன் அவர் சொந்தக் கையெழுத்தில் எழுதியுள்ள நாலாவது கடிதமும் உண்டு. ஹைகோர்ட்டில் அவரது அப்பீல் நிராகரிக்கப்பட்ட பிறகு இக் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளது.

—8-ம் பக்கம் பார்க்க

# தொழிலாளர் வாழ்வைப் பலியிடும் துரோகிகள்

## வஞ்சகர்களை பொசுக்க குமுறி எழும் எரிமலை

**கட்டுரை: பிரேமலால் குமாரசிறி**
பொதுக் காரியதரிசி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழில்: சத்தியன்

இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் உடுப்பு உரிபட்டு, கோவணம் மிஞ்சியிருந்ததுபோய்இப்போதுகோவணமும் இல்லாதுபோகும் நிலையில் உள்ளனர்.

இன்றுவரை தொழிலாளி வர்க்கத்தின் மகத்தான தலைவர்களெனப் பவனிவந்த அவர்களின் காட்டிக் கொடுப்பு நாடகத்தின் கடைசி அத்தியாயம் இப்பொழுது தென்படுகின்றது. சென்ற 7-ம்திகதி கொலன்ஞவ எண்ணைத் தொழிலாளர் கூட்டத்தில் உரைநிகழ்த்திய இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களுள் ஒருவரான என். எம். பெரேரா அவர்கள், ''தொழிலாளர்கள் இனிமேல் வேலைநிறுத்தம் செய்யக்கூடாதென'' ஆணையிட்டுள்ளார்.

8-ம் திகதி நடைபெற்ற தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் டாக்டர் பெரேரா, பீட்டர் கெனமன் ஆகிய இருவரும், தொழிலாளர்கள் பொதுக் கோரிக்கைகள் 21-ற்காகப் போராடுவதை எதிர்த்துள்ளனர்.

மந்திரி சபை ஆசனங்களை நாக்கில் ஜலம்ஊற விழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் இவர்கள் தமது சென்றகால சரித்திரத்தை மறந்துவிட்டனர். தொழிலாளி வர்க்கத்தின் மூலம் தாம் பிரசித்தமானதையும் முன்னுக்கு வந்ததையும் இவர்கள் மறந்துவிட்டனர். தொழிலாளி வர்க்கத்திற்குக் கொடுத்த வாக்குறுதிகளை இவர்கள் மறந்துவிட்டனர்.

தாங்கள் தலைமைகொடுத்த வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்து முதலாளி வர்க்கத்திற்கு பயன்தரும் வகையில், அவர்கள் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள, திரிபுவாத, சீர்திருத்தவாத செயல்முறைகளை நாங்கள் 1963 ஜனவரி இ.போ.ச. வேலைநிறுத்த காலத்திலிருந்து அம்பலப்படுத்த ஆரம்பித்தோம்.

அன்று அவர்கள் பால்கொண்ட விசுவாசத்தினுல் தொழிலாளர்கள் பலர், நாங்கள் சொன்னவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. அண்மையில் திரிபுவாதத் தலைவர்கள் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தை உடைக்கும் முயற்சியில், போட்டிச் சம்மேளனம் அமைத்தபொழுதுகூட, தொழிலாளர்கள் அவர்களின் உண்மையான உருவத்தை அறியாது, அவர்கள் பின்னுல் சென்றனர்.

ஆனுல் இன்று முழு உலகத்திற்கும் குறிப்பாக இலங்கைத் தொழிலாளி வர்க்கத்திற்கு இந்தச் சுயநல, தன்னகங்கார திரிபுவாதத் தலைவர்களின் சந்தர்ப்பவாதம், வஞ்சனை, கபடம்,வெளிப்படையான காட்டிக் கொடுப்பு பெரியளவு அம்பலத்திற்கு வந்துள்ளது. இவர்களின் முடிவுகாலம் நெருங்கிவிட்டது.

தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியில் 21 கோரிக்கைகளுக்கு ஆதரவாகப் போராடுவதை எதிர்த்து என். எம்.—கெனமன் கும்பல், முன்வைத்த தர்க்கம் போராடுவதற்கு முன் கோரிக்கைகள்பற்றிப் பரிசிலனை செய்யவேண்டுமென்பதும் தொழிலாளி வர்க்கத்தைத் தயார் செய்யவேண்டுமென்பதுமேயாகும். தொழிலாளர்கட்கு சம்பளம் உயர்த்தவேண்டும் என்பதுபற்றிப் பரிசிலனை செய்வதற்கு என்ன இருக்கிறது? வருடாந்த லீவு, போனஸ் ஆகியவை பற்றிப் பரிசிலனை செய்வதற்கு என்ன இருக்கின்றது?

இப் போராட்டத்திற்காகத் தொழிலாளி வர்க்கத்தைத் தயார் செய்வதற்கு இன்னும் செய்ய வேறென்ன இருக்கிறது? இந்தப் போராட்டத்திற்கான ஒழுங்குகள் செய்யத் தொடங்கி ஒரு வருடத்திற்கு மேலாகின்றது. ஒருவருடத்திற்கு முன் சகல தொழிற் சங்கங்களும் ஒன்று திரண்டு, நீண்ட நெடுங்காலப் பேச்சு வார்த்தைகள் நடாத்தி 21 கோரிக்கைகள் உருவாக்கப் பட்டன. இதன்பின் பல்வேறுபட்ட தொழிற் சங்கங்களும் இடதுசாரிக் கட்சிகளும் இக்கோரிக்கைகளை விவாதித்து திருத்தங்களைச் சமர்ப்பித்தன. சென்ற வருடம் செப்டம்பர் 29-ந் திகதி சிலிங்கோ மண்டபத்தில் நடைபெற்ற இலங்கையிலுள்ள தொழிற் சங்கங்கள் அனைத்தினதும் பிரதிநிதிகள் மகாநாடு இக்கோரிக்கைகளை விவாதித்து முடிவாகவும் ஏகமனதாகவும் அவற்றை ஏற்றுக்கொண்டது.

இதன்பின் தொழிற்சாலைகளிலும், வேலைத் தலங்களிலும், தோட்டங்களிலும், டிப்போக்களிலும், அலுவலகங்களிலும் தொழிலாளர்களும், ஊழியர்களும் நுணுக்கமான விவாதங்கள் நடாத்தி இப்பொதுக் கோரிக்கைகளுக்காகப் போராடுவதற்கு,பலமாதகாலமாகத் தொழிலாளி வர்க்கத்தைத்தயார்செய்யவேண்டி அவசியமான பிரச்சாரமும், அமைப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு முடிந்துவிட்டன.

இறுதியாக, சென்ற மார்ச் மாதம் 21-ந் திகதி கொழும்பு பூராவும் ஊர்வலம் சென்று காலிமுக மைதானத்தில் ஒன்று திரண்ட ஆயிரக்கணக்கான உழைக்கும் வர்க்க மக்கள் 21 கோரிக்கைகளுக்காகப் போராடுவதென உறுதிபூண்டனர்.

மேலும் என்னசெய்ய இருக்கின்றது? தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியில் என். எம்.—கெனமன் கும்பல் இதற்கு எதிராக எழுந்து நின்றதற்கு ஒரே ஒரு காரணம் அவர்கள் மந்திரிப்பதவி பெறுவதற்கு முட்டுக்கட்டையாக உள்ள எதையும் செய்யத் தயாராயில்லாததுதான்.

மந்திரிப்பதவி பெற்று, முதலாளி வர்க்கத்துடன் ஒன்று சேர்ந்து, தொழிலாளி வர்க்கத்தை நசுக்க சர்வாதிகார அரசாங்க இயந்திரத்தை நிறுவ, தமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்வரை தொழிலாளி வர்க்கம் மௌனமாக இருக்கவேண்டும்.

மந்திரிப் பதவி அவ்வளவு மகத்தானதா? மந்திரிப் பதவி பெறுவதற்காக முழுத் தொழிலாளி வர்க்கத்தினதும் எதிர்காலம் விற்கப்படல் வேண்டும்.

ஆனுல் தங்கள் வாழ்வைத் தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் மந்திரிப்பதவி ஒன்று இரண்டு பெறுவதற்காக விற்பதற்குத்தொழிலாளர்கள் தயாராயில்லை. புரட்சிகர ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்கத் தயாராயில்லாததால், பங்கலோட்டு அடைந்துள்ள அரசாங்கத்திற்கு முண்டுகொடுப்பதற்கும் அதன் மூலம் தமதுவாழ்வின், இறுதி நோக்கமான மந்திரி ஆசனத்தில் குந்துவதற்குமாகத் தொழிலாளி வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்கும் தலைவர்கட்கு இடமளிக்கும் வகையில் தமது உரிமைகளையும், அவ்வுரிமைகளுக்கான தமது போராட்டத்தையும், ஏன் தமது முழு வாழ்வையுமே பலியிடுவதற்கு, புரட்சிகரப் பாரம்பரியமுள்ள இலங்கைத் தொழிலாளி வர்க்கம், என்றுமே தயாராகவில்லை.

இதுவரை தங்களை ஏமாற்றி வந்த இவ்வஞ்சகத் தலைவர்களின் கபடத்தையும் காட்டிக் கொடுத்தலையும், தொழிலாளி வர்க்கம் நாளுக்குநாள் நன்குணர்ந்து வருகின்றது. கோபாக்கினி எரிமலையாக மாறி, இத்தலைவர்களைப் பொசுக்கும் நாள் வெகுதூரத்திலில்லை.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமும், இடதுசாரி இயக்கமும் மட்டுமல்லாது இலங்கைத் தொழிலாளி வர்க்கமும் தனது பாதையில் ஓர் புதிய திருப்புமுனையைநோக்கி வந்துள்ளது. இதுவரை தமது தலைவர்களாகப் பவனி வந்தவர்களில் நம்பிக்கைவைத்து அவர்களின் பின்னுல்கண் மூடித்தனமாகச் சென்று படுகுழியில்விழுவதா? அல்லது எதிர்காலத்தை தமது கையிலெடுத்து, தமது வர்க்கத்தையும், தமது ஐக்கிய சக்தியில் விசுவாசம்கொண்டு போராட்டப்பதாகையையும்உயர்த்திப் பிடித்து ஒளிபொருந்திய எதிர்காலத்தை நோக்கி முன் செல்வதா?

தொழிலாளர்களே வீறுகொண்டெழுங்கள்!

தலைவர்களே ஜாக்கிரதை!

# செங்கொடிக்கு அடிமை பாரிலே!

★ திருகோணமலை — வில்வராஜ் ★

சங்கை கெட்டமுத லாளிவர்க்கமினிச்
செங் கொடிக்கடிமை பாரிலே — இனிப்
பொங்கு சக்திகளின் போரின் ஓலிதனை
எங்கணும் பெறுவர் நேரிலே

அடிமையானநம தருமை வர்க்க ஒலி
கடுமையாக இனி இரையுமே — அதை
மடமை என்றுஇகழ் திரிபு வாதிகள்தம்
கயமை கப்பலினில் விரையுமே

ஒன்று சேர்க!என எங்கள் தோழர்தமை
உலக மெங்குமழைத் தோமடா — இதைச்
கண்டு நாடிவிழும் கயவர் கூட்டமதைச்
சென்றுதைக்க ஒன்று சேரடா

வீரர் நாங்களிந்த வீணர்க்கோ அடிமை
தீரர்களினியும் சாவதோ — இந்தச்
சூரர்முன் அவர்கள் சுக்குநூறு எனக்
கூறடா எழுந்து கூடடா

பொறுமை என்றபதம் போதுமே பதுமை
போல வாழ்ந்தநிலை காணுமே — இனியும்
சிறுமையேன் சிறிது ஒன்றுசேர் இவர்கள்
சிரசு கொய்து மகிழ்ந்தாடுவோம்!

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

# காட்டிக் கொடுப்போரை ஓட்டம்பிடிக்கச் செய்வோம்

## பாட்டாளி வர்க்கத்தின் இன்றைய பணி

**1963** ஆகஸ்ட் மாதம் பன்னிரண்டாம் திகதி, ஹர்த்தால் நினைவு தினம். கொழும்பு நகர் பெரும் பூரிப்புடனும் ஆரவாரத்துடனும் காட்சி தந்தது. நகரெங்கும் செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன. செஞ்சட்டை வீரர்கள் வீதிகளில் வலம் வந்தனர்.

ஈழத்திரு நாட்டில், இடதுசாரி இயக்க வரலாற்றின் திருப்புமுனை எனக் கருதி, இடதுசாரி ஐக்கிய முன்னணி தோன்றிவிட்டதென்றும், தமது வேலைத் திட்டத்தை கைச்சாத்திடப் போகிறார்கள் என்றதும் தொழிலாளி வர்க்கத்தினர் சகலரும் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்றனர். பத்தாயிரத்திற்குமதிகமான மக்கள் சுதந்திர சதுக்கத்தில் சங்கமமாயினர். இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் வழி நெடுக நின்று ஊர்வலத்தை வரவேற்றனர்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டபோது கரகோஷம் வானைப் பிளந்தது. சங்கொலி மண்ணைப் பிளந்தது.

இவ் ஒப்பந்தத்தின் முன்னுரை பின்வருமாறு:

"ஏகாதிபத்தியத்திற்கும் இலங்கையிலுள்ள முதலாளித்துவ பிற்போக்குச் சக்திகளுக்கும் எதிராக ஒரு திடம் கொண்ட போராட்டத்தை நடத்த தனக்குச் சக்தி கிடையாது என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் நன்கு நிரூபித்துவிட்டது. அதன் 'மத்திய வழிக்' கொள்கை எத்துணைப் பங்கலோட்டுத்தனமானது என்பதும் இன்று தெளிவாகிவிட்டது. அதன் பாட்டாளி வர்க்க எதிர்ப்புக் கொள்கையும், அது பொதுமக்கள் மீது கொண்டுள்ள பெரிய அவநம்பிக்கையும், மக்களை அதன்பால் வெறுப்படையச் செய்துவிட்டன.


அதன் ஆட்சியின்கீழ் ஜனநாயக உரிமைகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் ஆபத்து விளைந்துள்ளது. தேசிய ஒற்றுமை சிதறடிக்கப்பட்டுவிட்டது. சாதாரண பொது மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்துவிட்டது, அத்துடன் மேலும் மேலும் வாழ்க்கைத் தரம் படுகுழியில் தள்ளப்பட்டுக்கொண்டு வருகிறது.

இன்னும் பொதுமக்கள் தமது போராட்டத்தின் மூலம் பெற்ற சில வெற்றிகள் கூட அரசாங்கத்தின் திறமையின்மையாலும், ஊழல்களுக்கு இடமளிக்கும் போக்காலும். விசேஷ நலவுரிமைகளை அனுபவிப்போருக்கு எதிராக செயலாற்ற அஞ்சும் தன்மையாலும் முறியடிக்கப்பட்டு வருகின்றன.

விசேஷ நலவுரிமைக்காரர்களின் கோரிக்கைகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் மீண்டும் மீண்டும் விட்டுக் கொடுத்து வருவது ஏகாதிபத்திய வாதிகளையும், இலங்கையிலுள்ள முதலாளித்துவ, பிரபுத்துவ பிற்போக்கு சக்திகளையும் துணிச்சலுடன் செயலாற்ற இடமளித்து வருகிறது. 1962 ஜனவரி மாதம் ஒரு ராணுவச் சதி தோல்வியுற்றது. அதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் எண்ணெய்த்தகராறை முன்வைத்து இலங்கையின் சுதந்திரத்திற்கே ஊறு தேட முயன்று வருகிறார்கள்.

அன்னிய, உள்ளூர் விசேஷ நலவுரிமைக்காரர்களின் குரலாக நின்று போராடும் யூ. என். பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் தவறுகளையும், குழப்பங்களையும் உபயோகித்து 1956-ம் ஆண்டில் தானடைந்த தோல்வியிலிருந்து தன்னை

—6—ம் பக்கம் பார்க்க



# லெனின் வாழ்வு நமக்கோர் உதாரணம்

### லெனின் சொன்ன இரகசியம்

தொழிலாளி வர்க்கம் உடலாலும் உள்ளத்தாலும் லெனினிடம் விசுவாசமாயிருந்தனர். தொழிலாளர்களும் விவசாயிகளும் அவருக்கு எழுதிய பல கடிதங்கள், அவர்மேல் உள்ள அளவற்ற பற்றையும் பாசத்தையும் வெளிக்காட்டின.

அக்டோபர் புரட்சியின் 5-வது ஆண்டுவிழாவில் கிளின்சி நெசவாலைத் தொழிலாளர்கள், தமது தொழிற்சாலையை லெனின் தொழிற்சாலையெனப் பெயரிட்டு அழைக்கத் தீர்மானித்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது மனமார்ந்த நல்லாசிகளையும் எம்மால் செய்யப்பட்ட ஓர் சிறிய பரிசையும் அனுப்புகிறோம். எமது கைகளால் நெய்யப்பட்ட புடவையினால் ஆக்கப்பட்டஉடையை, எமது ஆசானும் தலைவனுமாகிய தாங்கள் அணிவீர்கள் என்று நாம் நம்புகிறோம். இதையிட்டு நாம் பெருமைப் படுவோம். எமது நல்லாசியுடன் இதை அணியுங்கள். நாம் என்றும் உங்கள் பக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புரட்சிக்கும் தங்களுக்கும் நாம் என்றும் விசுவாசமுள்ளவர்கள்.

இப்படிக்கு
லெனின் கிளின்சி
நெசவாலை
தொழிலாளர்கள்

மேற்படி கடிதத்திற்கு லெனின் பின்வரும் பதிலை அனுப்பினர்.

அன்புத் தோழர்களே,
உங்கள் நல்லாசிகட்கும் பரிசுக்கும் எனது மனமார்ந்த நன்றி. ஆனல் நான் ஒரு இரகசியம் கூறுகிறேன். எனக்குப் பரிசுகள் வழங்காதீர்கள். இந்த இரகசியத்தை

> ஏப்ரல் 22-ம் திகதி மாபெரும் லெனின் பிறந்த தினம். இத்தினத்தையொட்டி லெனின் வாழ்வைப் பிரதிநிதித்துவப்படுத்தும சில செய்திகளை இங்கு பிரசுரிக்கின்றோம.

சகல தொழிலாளர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். மிக்க நன்றி. எனது நல்லாசிகள் உரித்தாகுக.

இப்படிக்கு
உலயனேவ் (லெனின்)

★

### சொல்லும் செயலும்

காரியாலயத்தில் விடுக்கப்பட்ட கட்டளைகளை கவனயீனமாக எந்த சிந்தனையுமின்றி அக்கறை செலுத்தாமல் இருப்பதை லெனின் அவர்களால் பொறுக்க முடியாது. அவர் காயமடைந்து சுகமான பின் வேலைக்கு வந்தார். டாக்டர்கள் அவரை புகை பிடிக்கும் அறைகளில் வேலைசெய்யக்கூடாது என்று கூறிவிட்டனர்.

கூட்டம் நடக்கும் மண்டபத்தில் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. லெனினுடைய அறையில் 'புகைத்தல் ஆகாது' என்ற சுலோகப் பலகை தொங்கியது. இதுவும் லெனினின் ஆணைப் படியே.

ஆனல் அங்கு வந்த தோழர்கள், அந்த விண்ணப்பத்தை ஏற்று நடப்பதில்லை. ஒரு நாள் அறை முழுவதும் புகையாக இருப்பதைக் கண்ட லெனின், சுலோகப் பலகையைக் கழற்றும்படி சொன்னர்.

"ஒரு தீர்மானத்தை நாம் அனுஷ்டித்து நடக்காவிடில், அத் தீர்மானத்திற்கு மதிப்பளிப்பதற்காகவாவது அதை அகற்றிவிடவேண்டும்" என லெனின் குறிப்பிட்டார்.

★

### எழுதிக்கேள்

கூட்டங்களில் பூரணமாக எல்லோரும் ஒழுங்காகவும், மௌனமாகவும் இருக்க வேண்டும் என்பது லெனினுடைய உறுதியான விண்ணப்பம். ஆனல் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது செயலாளரிடம் யாராவது ஏதாவது விபரங்கள் கேட்பார். அப்போது லெனின் ஒரு துண்டில் "எழுதிக் கேள்—பேசாதே" என்று எழுதிக் கொடுப்பார். அதுவும் பயனில்லையானல் "உன்னல் பேசாமல் இருக்கமுடியாவிட்டால் தயவுசெய்து வெளியேறு" என்று துண்டு மூலம் அறிவிப்பார்.

★

### லெனின் படம்

பல கலைஞர்கள் லெனினுடைய படத்தை வரையவும், சிலைகளைச் செய்யவும் விரும்பினர். ஆனல் லெனின் அதை முற்றாக மறுத்துவிடுவார். இறுதியில் ஒருமுறை அவர் அட்மன் என்பவருக்கு சம்மதித்தார். ஆனல் படங்கீறும்போது அசையாமல் இருக்க முடியாதென்றும் கூறினர். அட்மன் 2-3 நாட்களில் முடித்துவிடுவேன் என்று கூறியும் இரண்டுமாதங்களாக பலதடவைகள் அரை மணி நேரம் உட்கார்ந்திருக்க வேண்டியேற்பட்டது. அன்றியேவ் என்பவர் பென்சிலினல் சில படங்களை வரைந்தார். ஆனல் லெனின் படம் வரைவதற்காக அமர்ந்திருக்கவில்லை. வழக்கம் போல் தன் வேலைகளைச் செய்துகொண்டே இருந்தார். வேலைசெய்தார். தொலைபேசியில் பேசினர். வருபவர்களை வரவேற்றார். எழுதினர். இதன் மத்தியில் தான் கலைஞன் தனது வேலையைச் செய்யவேண்டியிருந்தது.

தொகுப்பு: தி. செ.

# ஏகாதிபத்திய நாடுகளிடையே கூர்மையடையும் பரஸ்பர முரண்பாடுகள்

## அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு போட்டி

'நாட்டோ' மண்டல நாடுகளின் தலைவர்கள் சமீப காலமாக அடிக்கடி தொடர்புகள் கொண்டு வருகின்றனர். ஐக்கிய அமெரிக்கா முதலில் மேற்கு ஜெர்மனியுடனும் பின்னர் இத்தாலி, கனடா, பிரிட்டன் ஆகியவற்றுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தியது. மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையில் இத்தகைய தொடர்புகள் அதிகரித்துள்ளன.

ஏகாபத்திய நாடுகளிடையில் முரண்பாடுகள் மேலும் ஆழமும் கூர்மையும் அடைந்துள்ளதையும், ஏகாதிபத்திய முகாமிற்குள் வேற்றுமைகள் வளர்வதையும், வெவ்வேறு சக்திகள் புதிய ரீதியிற் கூட்டுச் சேர்வதையும் இத்தகைய ராஜதந்திர நடவடிக்கைகள் காட்டுகின்றன.

மிகச் சிக்கலான ஏகாதிபத்திய முரண்பாடுகளின் அடிவேராக உள்ளது, தனது நேச நாடுகளைக் கட்டுப்பாடு செய்ய முயலும் ஐக்கிய அமெரிக்காவிற்கும் அதனை எதிர்க்கும் அந் நேச நாடுகளுக்கும் இடையில் நெடுங்காலமாக நடைபெறும் மறைமுகமான, பகிரங்கமான போராட்டங்களாகும்.

### ஆதிக்கத்தை நீடிக்க அமெரிக்கா முயற்சி

ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக லிண்டன் ஜோன்சன் பதவியேற்றபோது அவர் கென்னடியின் வாரிசாக ஏராளமான, சிக்கலான வெளிவிவகாரப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் அவர் நேச நாடுகளுடன் கூர்மையான முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள முயன்றார்.

அமெரிக்க ஆதிக்கத்தை நீடிக்க ஜோன்சன் கையாண்ட பல ரகமான தந்திரோபாயங்கள் பிரதானமாகக் கென்னடியினுடையவையே: மேற்கு ஐரோப்பாவைக் கட்டுப்பாடு செய்யும் அமெரிக்க திட்டத்தின் பிரதான தடங்கலை ஒழிப்பதற்காகச் சகல துறைகளிலும் பிரான்ஸைத் தனிப்படுத்துவது, என்பதே.

ஏனைய பொதுச் சந்தை (ஐரோப்பிய) நாடுகளைக் குறிப்பாக மேற்கு ஜெர்மனியை, சாதகமாக்கிக் கொள்ள அனேக காரியங்கள் செய்யப்பட்டுள்ளன. பிரிட்டனின் கஷ்ட நிலையை உபயோகித்து அதனை வாஷிங்டனை மேலும் பணிவாகப் பின்பற்றவும் பிரான்ஸின் எதிர்ப்புக்கு ஒரு மாற்றாகப் பயன்படவும் ஜோன்சன் நிர்ப்பந்தித்து வருகிறார்.

இத்தாலிய ஜனாதிபதி செக்னியுடன் தமது பேச்சுகளில் ஜோன்சன் இத்தாலியையும் வசியம் செய்ய முன்றார்.

பின் பிரிட்டிஷ் பிரதமர் ஹியுமுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் தீர்த்துக் கொள்ள முடியாத பல வித்தியாசங்கள் இருந்தாலும் பேச்சுவார்த்தைகளின் பின்னர் விடுக்கப்பட்ட கூட்டு அறிக்கை, ''பலமான, ஐக்கியமான மேற்கத்திய கூட்டணியை'' நிலைக்கச் செய்வது பற்றிக் கூறியது போக, ''ஒரு பரந்த அத்திலாந்திக் கூட்டுக்குட்பட ஐரோப்பாவில் சாத்தியமானளவு விரிவான அரசியல், பொருளாதார ஒத்துழைப்பு அமெரிக்காவினதும், பிரிட்டனினதும் கொள்கையின் ஒரு பொது நோக்காக இன்னமும் இருந்து வருகிறது'' எனவும் தெரிவிக்கிறது. இது பிரான்ஸின் மீது செலுத்தப்பட்ட ஒருவித நிர்ப்பந்தமெனக் கருதப்படுகிறது.

### பிரான்ஸின் சம பங்குக் கோரிக்கை

தற்போது பிரெஞ்சு—அமெரிக்க உறவுகள் மிக விரோத பான்மையான நிலையில் உள்ளன. மேற்கத்திய பத்திரிகைகளின் கூற்றுக்களின் பிரகாரம், இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள சரிப்படுத்த முடியாத வித்தியாசங்களுக்கு ஜோன்சன்—டிகால் பேச்சுவார்த்தைகள் ஒழுங்கு செய்யப் படாததே போதுமான சாட்சியமாகும்.

முதலாளித்துவ உலகில் ஒரு பிரதான வல்லரசு என்ற ரீதியில் பிரான்ஸ் ஒருபோதும் அமெரிக்காவின் ஏவலுக்குப் பணிய மனம் ஒருப்படாது. முன்னர், வாஷிங்டனின் நேச நாடுகள் அமெரிக்காவின் தலைமையை அங்கீகரித்துக் கொண்டு தமக்குச் சற்றுக் கூடுதலான செல்வாக்கை மட்டுமே கோரிய சமயத்திற் போலல்லாது, இப்போது பிரான்ஸ் இந்த ஆதிக்கம் முற்றாகக் களையப்படுவதையும் மேற்கத்திய தலைமையில் தனக்குச் சம பங்கையும் கோருகிறது.

''அத்திலாந்திக் சமூகத்திற்கு உட்பட்ட ஒரு ஐரோப்பா'' விற்கான அமெரிக்க திட்டத்திற்கு நேரடியாக எதிரான பல அரசியல் பொருளாதார, ராணுவ நடவடிக்கைகளைப் பிரான்ஸ் மேற்கொண்டுள்ளது.

தனது ஸ்தானத்தை மேலும் பலப்படுத்தப் பிரான்ஸ் அனேக காரியங்களைச் செய்துள்ளது. எர்ஹார்ட்டும் செக்னியும் வாஷிங்டனிலிருந்து திரும்பியபின் இருவருடனும் டிகால், பொதுச் சந்தை ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். லண்டனுக்கும் பாரிஸிற்குமிடையில் உறவுகளைச் சுமுகமாக்கி, இரு தரப்புத் தொடர்புகளை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 'நாட்டோ' மண்டலத்திற்குள்ளும் கிழக்கு-மேற்கு உறவுகளிலும் பிரான்ஸ் தொடர்ந்து அமெரிக்காவை எதிர்த்துச் செயல்படுகிறது.

இந்தவிதமான ''உலகக் கொள்கையை'' அமுல் படுத்துவதன் மூலம் பிரான்ஸ் இப்போது, அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கை தொடர்ச்சியாகப் பாரதூரமான தோல்விகளைக் கண்டுள்ள பிரதேசமான ஆசியாவை நோக்கித் தனது நடவடிக்கைகளின் கூர் முனையை நீட்டி வருகிறது. பிரான்ஸ் குறிப்பாகத் தனக்குப் ''பாரம்பரிய பந்தங்கள்'' உள்ள தென்-கிழக்கு ஆசியாவில் மிகக் கவனமாக உள்ளது. அமெரிக்க ''உதவியைக்'' கம்போடியா நிராகரித்ததைத் தொடர்ந்து பிரான்ஸ் தனது சொந்த ''உதவியை''த் தர முன்வந்தது. அமெரிக்க ஆக்கிரமிப்பு

★★★★★★★

**க. குமாரலிங்கம்**

★★★★★★★

தென்-வியட்நாமில் முடங்கிப் போயுள்ள ஒரு சமயத்தில் பிரான்ஸ், வியட்நாம் நடுநிலைமைப் படுத்தப்பட வேண்டும் எனப் பிரேரித்த பின்னர், தென்-கிழக்கு ஆசிய நாடுகளின் நடுநிலைமை உடன்படிக்கை ஒன்று இயற்றப்படுவதற்கான புதிய பிரேரணை ஒன்றையும் செய்தது.

ஜப்பான் வாஷிங்டனைச் சுற்றிச் சுழல் வதிலிருந்து வெளியேறத் தென்படும் சூழ்நிலையில் பிரான்ஸ் ஜப்பானியர்களுடன் தொடர்ச்சியாகத் தொடர்புகளை நிறுவிவந்துள்ளது. வாஷிங்டனின் ஆட்சேபத்தையும் தடங்கலையும் பொருட்படுத்தாது பிரான்ஸ் சீனாவுடன் ராஜதந்திர உறவுகளை நிறுவும் மிகுந்த முக்கியத்துவமுடைய நடவடிக்கையை எடுத்துள்ளது என்பது விசேஷ கவனத்திற்குரியது. இவை அனைத்தோடும் கூடவே பிரான்ஸ், லத்தீன் அமெரிக்காவிற் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கிறது.

இத்தப் பிரெஞ்சுச் சாதனைகள் எல்லாம் பிரெஞ்சு-அமெரிக்க முரண்பாடுகளை மேலும் கெட்டிப்படுத்த உதவியுள்ளன.

### தவித்த முயல் அடிக்கும் மேற்கு ஜெர்மனி

கூர்மையடையும் அமெரிக்க பிரெஞ்சு முரண்பாடுகளைத் தொடர்ந்து, மேற்கு ஜெர்மனி இரு தரப்புகளாலும் தாஜா செய்யப் படுகிறது. அது தன் விசேஷ ஸ்தானத்தைச் சாதகமாகக் கொண்டு, அமெரிக்கா சார்பாக இருப்பதும், பிரான்சுடன் கூட்டணி சேர்வதும், பிரிட்டனைத் திருப்திப் படுத்துவதுமான தந்திரத்தைக் கையாண்டு, தவித்த முயல் அடிக்கிறது.

மேற்கு ஜெர்மனியின் ஸ்தானத்தை உயர்த்துவதில் வாஷிங்டன், பொன் கணக்கிட்ட விதமாகவே நடந்து கொள்கிறது.

இருந்தபோதிலும், மேற்கு ஜெர்மனியை முன்னுக்கு வைப்பதில் வாஷிங்டனின் நோக்கம் அதன்மீது தன் பிடியை இறுக்கிக் கொள்வதாக இருக்கையில் பொன்னின் நோக்கம் தன்னை ஒரு பூரண ஸ்தானம் பெற்ற பெரும் வல்லரசாக'' ஆக்கிக்கொள்ளச் சந்தர்ப்பத்தை உபயோகிப்பதே. இந்த அடிப்படைப் பிரச்சினையில் இரண்டிற்குமிடையில் ஒரு முரண்பாடுள்ளது. இதன் காரணமாகவே எர்ஹார்ட் மேற்கு ஜெர்மனி ''ஓர் அமெரிக்க காவல் பிரதேசம் (புரொடெக்டரேட்) அல்ல'' என மொட்டையாகக் கூறியுள்ளார். வாஷிங்டனுடன் பேரம் பேசுவதில் பொன்-பாரிஸ் அச்சு ஒரு முக்கியமான சாதக அம்சம் என்பதை மேற்கு ஜெர்மனி அறிந்துள்ளது.

இதனால் தான் எர்ஹார்ட் அமெரிக்காவிலிருந்து தாம் திரும்பியதைத் தொடர்ந்து பிரான்ஸிற்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையில் ''நட்பும் புனரொற்றுமையுமே'' ''மேற்கு ஜெர்மன் கொள்கையின் அஸ்திவாரம்'' என மீண்டும் கூறினர்.

மேற்கு ஜெர்மனியர்கள் வாஷிங்டனுடனும் பாரிஸுடனும் சல்லாபிப்பதோடு பிரிட்டனும் சரசமாடி வருகின்றனர்.

மேற்கு ஜெர்மன் தந்திரம் முக்கோணமானது: அமெரிக்க சார்பு, பிரான்சுடன் கூட்டணி, பிரிட்டனைத் திருப்திப் படுத்துவது. அவ்வவ் நேரத்தின் நிலைமைக்கேற்பவும் தன் சொந்த நலன்களுக்கேற்பவும் பொன் தனது முக்கோணத் தந்திரத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கு அழுத்தம் கொடுக்கிறது. இன்னும் சிறிது காலத்திற்கு நடைமுறை நோக்கங்களுக்காகப் பலரைச் சல்லாபித்தல் வாடிக்கையாகவிருக்கும்.

### இரண்டும் கெட்ட நிலையில்பிரிட்டன்

மேற்கு ஜெர்மனியின் உயரும் அந்தஸ்திற்கு எதிர்மறையாக, மேற்கத்திய முகாமில் இரண்டாம் தலைமை நாடு என்ற பிரிட்டனின் ஸ்தானம், அது நாட்டோ ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதையும், பின்னர் பொதுச் சந்தையில் புகத் தவறியதையும் தொடர்ந்து, தாழ்ந்து வந்துள்ளது.

தனது ஸ்தானத்தைப் பலப்படுத்துவதில் நாட்டம் கொண்டு பிரிட்டன் சமீப காலமாகப் பல்வேறு விஷயங்களில் ஒரு சுதந்திரக் கொள்கையை வலியுறுத்தியுள்ளது; இயங்கி வந்துள்ளது. அது பிரான்சுடனை உறவுகளை சுமுகப்படுத்திக் கொள்ளத் தனக்கு இயன்றதனைத்தையும் செய்துகொண்டிருக்கையிலேயே, பொதுச் சந்தையில் அதனை வன்மமாக எதிர்க்கும் ஒரே நாடான பிரான்ஸைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் மேற்கு ஜெர்மனியையும் இத்தாலியையும் தாஜா செய்தும் வந்துள்ளது.

இருந்தும் விளைவுகள் லண்டன் எதிர்பார்த்தவற்றைப் பூர்த்தி செய்வனவாக இல்லை. ''மலேசியா'', சைபிரஸ் ஆகியன போன்ற பல பிரச்சினைகளைச் சமாளிக்க வாஷிங்டனின் உதவி இன்னும் தேவையாக உள்ளதாலும், விசேஷமாக பிரிட்டன் இன்னமும் ஓர் ஆங்கிலோ-அமெரிக்கக் கூட்டணி மார்க்கமாகத் தனது பெரு வல்லரசு அந்தஸ்தை நிலைநிறுத்த நம்பியிருப்பதாலும், அமெரிக்காவுடன் சம்பந்தங்களில் ஒரு பலமற்ற எதிராளியாகவே இருக்க வேண்டியுள்ளது.

### அதிகரிக்கும் வேகத்தில் உருக்குலைவு

வாஷிங்டன் சங்கடத்தை வசதியாகப் பிடித்துக்கொண்டு, பிற அமெரிக்க நேச நாடுகளும் இதேபோலத் தங்கள் சொந்த, சுதந்திர ஸ்தாபனங்களைப் பலப்படுத்தி வருகின்றன எனலாம். மேற்கு ஜெர்மனி நீங்கலாக அநேகமாக மற்றெல்லா மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்க பலதரப்பு அணு ஆயுதப் படைத் திட்டத்திற்கு 'இளநாக்கடித்து' வருகின்றன. வியாபார விஸ்தரிப்புச் சட்டப் பேச்சுவார்த்தைகளின் போது இந்நாடுகளிற் பல

—3-ம் பக்கம் பார்க்க

தொழிலாளி

# குருடனுக்கு உதவிய முடவன் கதை

## வெலிங்டன் தியேட்டருக்குள் ஊர்வலம்

## திரிபுவாதிகளின் வாலிபர் மாநாடு

செத்துக் கிடந்த கனக பவனம் 9-4-64 இரவு நாற்றமெடுக்கத் தொடங்கியது. விடிந்தால் 10-4-64. திரிபுவாதிகளின் 'வாலிபர்' சங்க மாநாடு.

எற்பாடோ பூஜ்யம். 'ஐயா, பொன்னேடு' ஓடினூர். சமசமாஜிகளின் கால்களில் தஞ்சம் என்று விழுந்தார். நவீன ட்ரொஸ்கியவாதிகட்குக் கடாட்சம் அளித்தார், 'உபகதை மன்னர்' முன்னைநாள் செனட்டர் நாகலிங்கம்.

இனி என்ன வேண்டும்!

'குருடனுக்கு உதவிய முடவன்' கதை நடந்தேறியது. சமசமாஜப் 'பொடி'யன்கள் 'இயங்கத்' தொடங்கினர். யாழ்ப்பாணக் குடா நாடு முற்ருக 'வான்கள்'கள் பறந்தன. சமஷ்டிப் பாணியில் ஆட்கள் சேர்க்கப்பட்டனர்.

தலையோடு போவது தலைப் பாகையுடன் போச்சு. கொழும்பிலிருந்து போனவர்களையும் சேர்த்து சுமார் 150 பேர்களுடன் மாநாடு 'ஜாம் ஜாம்' என்று ஆரம்பமாகியது. மண்டபத்துள் பார்த்த இடமெல்லாம் 'புதுமுகங்கள்' என்ன நடக்கின்றது என்று தெரியாது விழித்துக்கொண்டிருந்தன.

அண்ணுத்துரை 'பேஷனில்' உயர் திரி பீட்டர் கெனமன் கூட்டம் தொடங்கிய பின்பு மேடையேறினுர். 'வான்' பிளக்க வந்தவர்கள் கரகோஷம் செய்தனர்.

மாநாட்டின்போது அம்மையார் விவியன் கதாப்பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். ''பாலா தம்பு, எட்மன் சமரக்கொடி, காராளசிங்கம் ஆகியோரை நாங்கள் நிச்சயமாக எங்கள் கட்சியிலிருந்து உதைத்துத்தள்ளுவோம்'' என்று மண்டபத்தின் ஓடு நடுங்கக் கத்தினுர். அப்போது .......

பீட்டர் கெனமன் தன்னை மறந்து 'டண்ணிற்' என்று கத்தியவாறு கைதட்டி தன்னந்தனியாக ஆரவாரித்த போது அங்கு கூடியிருந்த உதிரிகளும் கையைத்தட்டி கூப்பாடு போட்டன. (கட்சிக் கட்டுப்பாடு வாழ்க!)

இதன் பின் சில குருவிச்சைகள் பேசியபின் மட்டக்களப்பில் இருந்து வந்த முன்னைநாள் தமிழரசுக் குட்டியும் இன்னைநாள் திரிபுக் குட்டியுமான 'டிப்ளமோ இன் திரிபுசம்' பேச மேடை ஏறியதும் கம்யூனிஸ்ட் கிருஷ்ணக் குட்டியைத் தாக்கத் துவங்கியது. சில மாதங்களுக்கு முன்பு சமஷ்டிகளின் சு'தந்திரனில்' கிருஷ்ணக் குட்டி இந்தியாவுக்குக் கள்ளத்தனமாக பணம் அனுப்புகிருர் என்று தான்தோன்றித் தனமாக கற்பனையில் எழுதிய பொய்ச் செய்தியை அப்படியே ஒப்புவிக்கத் தொடங்கியது. எவ்வளவு கீழ்த்தரமான சொற்களை அள்ளி வீச முடியுமோ அவ்வளவையும் அள்ளி வீசியது. அப்போது நல்லூரடியைச் சேர்ந்த திருநீற்றுப் பட்டைத் திரிபுவாத நாதர் திடீரென்று எழுந்து நீர் ''பேசுவது அபாண்டம்'' என்று கத்தினுர். கத்திய தோடு நில்லாமல், கம்யூனிஸ்ட் தோழர் கிருஷ்ணக் குட்டியைத் தாக்கியதை வாபஸ் பெறவேண்டுமென்று ஒரே பிடியாக நின்ருர். ஐயாவும், பொன்னரும் அவரைச் சந்தேகக் கண்ணுடன் பார்த்தனர். உண்மையான மார்க்ஸிஸ-லெனினிஸ வாதியான அவருடைய மைத்துனர் இவரைத் திருத்தி விட்டாரோ என்ற பயம் அவர் பார்வையில் தொனித்தது. அங்கு நடந்த குழப்பத்தைப் புரிந்து கொள்ளமுடியாது திரி பீட்டர் தவித்துக்கொண்டிருந்த போது பேச்சாளர் தான்பேசியது அனைத்தையும் வாபஸ் பெறுவதாகச் சொன்னுர். இக் குழப்பத்தின் பின் அழையா பீட்டரையாவின் அருகே நடக்க நூறுபேர்தானுமில்லாத 'மாபெரும்' ஊர்வலம் ஆரம்பித்தது.

ஊர்வலத்தின்பின் யாழ்ப்பாண முற்றவெளியில் திரிபுவாதிகளின் கூட்டம் தோல்விகரமாக ஆரம்பமாகியது. நவீன திரிபுவாதமென்ருல் என்ன என்பதை அங்கு பேசியவர்கள் புரட்சியைத் திட்டியதன் மூலம் நன்கு ஊர்ஜிதப் படுத்தினர். திரி ஜெயசிங்கம் பேசியபொழுது சமஷ்டித் தாத்தா செல்வநாயகம்இடதுசாரி—அரசாங்க ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்று பத்திரிகையில் அறிக்கை விடுத்துள்ளார். அவர் அன்றே பெரிய மனிதர்; மகான். என்றெல்லாம் வானளாவப் புகழ்ந்தார். செல்வநாயகம் இடதுசாரி—அரசாங்க ஒப்பந்தத்தை ஆதரிக்கிருர். தமிழர்களே பார்த்தீர்களா என்று விழித்தார். ''இந்த ஆட்சியின் தேசியமயக் கொள்கை இலங்கையை கம்யூனிஸம் என்ற அபாயத்துள் கொண்டுபோய் விடும் என்று முன்பு திரு செல்வநாயகம் கூறியது தெரியாததாலோ என்னவோ ஜெயசிங்கம் இப்படியே செல்வநாயகம் புகழ்பாடிக்கொண்டே போனுர்.

ஐயோ ஜெயசிங்கம் பாவம். விடிந்ததும் திரு செல்வநாயகம் முதல்நாள் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை யென்று கருதப்பட்டதை அப்படியே வாபஸ் பெற்றிருந்தார்.

திரிபுவாதிகளின் இம் மாநாடு முடிந்ததும், எம். ஜி. ஆரின் படம் பார்க்க சிறப்பான ஓர் ஊர்வலம் வெலிங்டன் தியேட்டருள் நுழைந்தது.

(நமது இரகசிய நிருபர்)

## காட்டிக் கொடுப்போரை ஓட்டம் பிடிக்கச் செய்வோம்

—4-ம் பக்கத் தொடர்

மீட்டுக்கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற திடத்தோடு போராட முன்வந்திருக்கிறது.

இலங்கை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க யூ. என். பியிடம் ஆக்கரீதியான மாற்றுக் கொள்கை எதுவும் கிடையாது. அது தன் அரசியல் பங்கலோட்டுத்தனத்தை மறைக்க ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் மீதும் செயல்கள் மீதும் மக்கள் கொண்ட அதிருப்தியை உபயோகிக்க முயல்கிறது. தான் ஒரு திருந்திய கட்சி என்று பாசாங்கு செய்து கொண்டு அரசியல் அனுபவமற்றவர்களை ஏமாற்றிக் குழப்ப முயலும் யூ.என். பி தனது ஏகாதிபத்தியச் சார்பான கொள்கைகளையும், பிற்போக்குத் தன்மையையும் மறைக்கலாம் என்று எண்ணுகிறது.

யூ. என். பி. யும், ஏகாதிபத்தியமும் ஏற்படுத்தும் இந்த ஆபத்துக்களை ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலோ, அதன் கொள்கைகளாலோ முறியடிக்க முடியாது. இந்த ஆபத்துக்களுக்கு முன்னல் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விட்டுக் கொடுத்தும் பின் வாங்கியும் நிற்கும் நிலை தேசிய சுதந்திரத்தை பலப்படுத்தி, பொருளாதார நெருக்கடிகளையும், மக்கள் பிரச்சினைகளையும் தீர்த்து ஒரு சோஷலிஸ சமுதாயத்தை நிறுவ முயலும் எல்லோருக்கும் ஒரு இக்கட்டான சூழலை உருவாக்குகிறது.

இதனை மாற்ற இலங்கை அரசியல் விவகாரங்களில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுத்தப் படவேண்டும். அத்துடன் இத் திருப்பத்தை ஏற்படுத்த வல்ல ஒரு புதிய தலைமையையும் நாம் காணுதல் வேண்டும்.

இத் தேவையை மக்கள் உணர்ந்துள்ளமைதான்அவர்களிடையே இடதுசாரி ஒற்றுமை அவசியம் என்ற பேராசையை, அவாவை ஆழமாகத் தூண்டியுள்ளது.

இன்றைய நிலைமையின் தேவைகளுக்கு ஏற்பவும், இடதுசாரி ஒற்றுமை அவசியம் என்ற இவ்வுணர்ச்சியின் எதிரொலியாகவும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் ஒரு இடதுசாரி ஐக்கிய முன்னணியைத் தோற்றுவிக்க ஒப்புக்கொண்டுள்ளன. கீழ்க் கண்ட பொதுவான ஒரு வேலைத் திட்டத்தை நிறைவேற்றக் கூடிய ஒரு அரசாங்கத்தை நிறுவும் நோக்கத்துடன் சகல ஏகாதிபத்திய விரோத, பிரபுத்துவ விரோத சோஷலிஸ சக்திகள் யாவற்றையும் ஒன்று திரட்டுவதே இந்த இடதுசாரி முன்னணியின் நோக்கமாகும்.''

இந்த நம்பிக்கையில் தான் தொழிலாளர்களும் மக்களும் இடதுசாரி ஐக்கிய முன்னணியை முழு மனதுடன் வரவேற்றனர். சொல்லுக்கும் செயலுக்கும் என்ன வேற்றுமை? இடதுசாரிஐக்கிய முன்னணியின் தலைமை எம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டது. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்று திரட்டத் தவறி விட்டது. தொழிலாளர்களின் அன்ருடப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கத் தவறிவிட்டது. விவசாய மக்களை அணிதிரட்டத் தவறிவிட்டது. தொழிலாளி, விவசாய ஐக்கியத்தை ஏற்படுத்தி வெகுஜன இயக்கம் நடத்த மறந்துவிட்டது.

அது மட்டுமா? ஓர் தேர்தல் முன்னணியாக மாறியதுமட்டுமல்லாமல், தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்கவும் துணிந்துவிட்டது. 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்திற்கு முட்டுக்கட்டையாகிஉள்ளது. ஐக்கிய மேதினம்-சகல தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்த மேதினம் வேண்டாம் என்கிறது. ஏன்? சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் மந்திரிப்பதவிப் பிச்சைக்காக தூற்றியவர்களைப் போற்றுகிறது. போற்றியவர்களைத் தூற்றுகிறது.

தொழிலாளி வர்க்கம் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது. இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு ஓர் புரட்சிகரத் தலைமை வேண்டும். காட்டிக் கொடுப்போரை ஓட்டம் பிடிக்கச் செய்ய வேண்டும். இதுவே இன்றைய கட்டத்தின் பாட்டாளி வர்க்கத்தின் முதல் பெரும் பணி,

# திரிபுவாதத்தை எதிர்ப்போம்

## இந்தோனேஷியக் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம்

சர்வதேச கம்யூனிஸ இயக்கம் பலப்படுவதற்குக் கீழ்க்கண்ட கொள்கைப் பதாகைகளை எல்லா மார்க்ஸிஸ—லெனினிஸக் கட்சிகளும் உயர்த்திப் பிடித்தல் வேண்டும் என்று 1963 டிசம்பர் 23 முதல் 26 வரை ஜகர்த்தா நகரில் நடைபெற்ற இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் இரண்டாவது பிளீனரி கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

1. திரிபுவாதத்தை எதிர்த்து மாக்ஸிச—லெனினிஸ பதாகையை உயர்த்துக.

2. சரணுகதியை எதிர்த்து புரட்சியின் பதாகையை உயர்த்துக.

3. போலி சமாதானத்துக்குப் பதிலாக உண்மை சமாதானத்தின் பதாகையை உயர்த்துக.

4. 'மகத்தான தேசம்' என்ற தன்னகங்காரத்தை எதிர்த்து தொழிலாள வர்க்க சர்வதேசியம் என்ற பதாகையை உயர்த்துக.

5. பிளவு வேலைகளை எதிர்த்து ஒற்றுமை என்ற பதாகையை உயர்த்துக.

6. தோல்வி மனப்பான்மையை எதிர்த்து புரட்சிகர தன்னம்பிக்கை என்ற பதாகையை உயர்த்துக.

மார்க்ஸிஸ—லெனினிஸ
தத்துவ அரசியல் மாதப்
பத்திரிகை
கம்யூனிஸ்ட்
ஆசிரியர்:
சண்முகதாசன்

# இ.போ.ச. தொழிலாளர்கட்கு மேலும் வெற்றிகள்

## செங்கொடிச் சங்க வேலைநிறுத்தம் வெற்றி!

அட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த சாமிமலைப் பகுதியிலுள்ள கரவளைத் தோட்டத்தைச் சேர்ந்த செங்கொடிச் சங்கத் தொழிலாளர்கள் 400 பேர் இம் மாதம் 8-ந் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்தனர். தோட்டக் கமிட்டியின் மினிட் புத்தகத்தை தமிழில் ஏற்க துரை மறுத்ததாலும் தோட்டத் தலைவர் தோழர் சுப்பிரமணியத்தை தோட்டத் துரை ஈஸ்டில் அவமானகரமாக நடத்தியதாலும், செங்கொடிச் சங்கத் தொழிலாளர்கள் தோட்டத் துரையின் மூர்க்கத்தனத்தை எதிர்த்து போராட்டத்தில் இறங்கினர். இரண்டு நாட்கள் வேலைநிறுத்தம் செய்த பின் அட்டன் தொழில் அதிபரினதும், செங்கொடிச் சங்க மாவட்டப் பிரதிநிதிகளினதும் முயற்சியினால் தோட்டத் துரை பணிந்தார். மினிட் புத்தகத்தை தமிழில் ஏற்க சம்மதித்தார். தலைவரிடம் வருத்தம் தெரிவிக்க ஒப்புக்கொண்டார். வேலை நிறுத்தம் வெற்றிகரமாக முடிவுற்றது.

## போராட்டப் பாதையே வெற்றிப் பாதை

### எமது மேதின ஊர்வலத்தில் கலந்துகொள்வீர்!

இ. போ. ச. தொழிலாளர்களின், 17 நாள் வீரம் செறிந்த போராட்டத்தின் பிரதிபலனாக சகல தொழிலாளர்கட்கும் 7 நாள் லீவு கிடைத்துள்ளது. இதற்கு முன் இ. போ. ச. தொழிலாளர்கட்கு 28 நாள் லீவு கிடைத்துள்ளது. 1964-ம் ஆண்டு ஆகஸ்டு முதல் தேதி தொடக்கம் இவர்கள் 35 நாள் லீவு எடுக்க முடியும். தொழிலாளர்களின் வெற்றிப் பாதை போராட்டப்பாதை என்பதை இந்த நிகழ்ச்சி மேலும் ருசுப்படுத்துகிறது. இ. போ. ச. தொழிலாளர்கள் 9 கோரிக்கைகளை முன்வைத்துப் போராடியபோது இடதுசாரி இயக்கத்தின் திரிபுவாத சீர்திருத்தவாதத் தலைவர்கள், தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்து. அவர்களின் போராட்டத்தை முறியடிக்க முனைந்தனர்.

ஆனால் இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் தலைமையில் வீரமிக்க போராட்டம் நடத்திய இ. போ. ச. தொழிலாளர்கள் சாரதிகள், கண்டக்டர்கட்கு சம்பள உயர்வும் 7 நாள் லீவும் வென்றெடுத்துள்ளனர்.

மேலும் கிழமைக்கு 45 மணி நேரவேலை; புதிய சம்பளத் திட்டம்; அரசியல் உரிமைகள் போன்ற கோரிக்கைகள் வென்றெடுக்கவேண்டி இருக்கின்றது.


இந்தக் கோரிக்கைகள் 21 கோரிக்கைகளில் இப்பொழுது இடம்பெற்றுள்ளன. இ.போ.ச. தொழிலாளர்கள் உட்பட சகல தொழிலாள வர்க்கமும் ஐக்கியப்பட்ட போராட்டங்களின் மூலம்தான் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பதை உணர்ந்துள்ளனர்.

புரட்சிகர சரித்திரமுள்ள இ. போ. ச. தொழிலாளர்கள் சகல தொழிலாளி வர்க்கத்துடனும் தோளோடு தோள் நின்று போராடத் தயாராயுள்ளனர். இ. போ.

**தம்மிககுணதாசா**
அமைப்புக் காரியதரிசி
(இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம்.)

ச. வேலைநிறுத்தத்தைக் காட்டிக்கொடுத்தது போலவே, 21 கோரிக்கைகளையும் திரிபுவாதிகள் சீர்குலைக்க முனைகின்றனர். தொழிலாளர் ஒற்றுமையைகுலைக்கமுனைகின்றனர்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியும், தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியும் ஐக்கியப்பட்ட மேதினம் கொண்டாடவேண்டும் என்ற ஏகோபித்த கோரிக்கையை திரிபுவாத, சந்தர்ப்பவாத இடதுசாரித் தலைவர்கள் நிராகரித்துள்ளனர். இதன் மூலம் 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்தை முறியடிக்கலாம் என்று இவர்கள் நினைக்கின்றனர்.


தோழர் தம்மிக குணதாசா

ஆதலால் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர சக்தியை பிரகடனப்படுத்துவது எமது கடமை ஆதலால், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் ஆகியவற்றினால் ஒழுங்கு செய்யப்படும் மேதின ஊர்வலத்தில் இ. போ. ச. தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் கலந்துகொள்ளவேண்டும்.

இதன்மூலம் சகல தொழிலாளி வர்க்கத்தினதும் ஐக்கியத்தைப் பலப்படுத்தி 21 கோரிக்கைகளின் போராட்டத்திற்காக அணி திரண்டு முன்செல்ல முடியும்.

புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தின் கடமைகளில், இ, போ. ச. தொழிலாளர்களின் பங்கு முக்கியமானது. இதை நாம் வெற்றியுடன் செய்து முடிப்போம்!




## இறுதிப் போராட்டம் நடத்தத் தயாராகுவோம்

### வாலிபர் சம்மேளனச் செயலாளரின் அறைகூவல்

"தொழிலாளர் வர்க்க ஆட்சியில் தான் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும். தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெற முடியும். ஆகவே தோட்டங்களைச் சேர்ந்த வாலிபர்கள் நகரப்புற வாலிபர்களோடு ஒன்றுபட்டு ஆயுதம் தாங்கிப் போராட்டம் நடத்தி தொழிலாளர் வர்க்க ஆட்சியை அமைக்கத் தயாராக வேண்டும்', என கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கங்களின் சம்மேளனப் பொதுச்செயலாளர் தோழர் தர்மதாச, அட்டன் தலவாக்கொல்லை மாவட்டங்களைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் வாலிபர் சக்க உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் கொண்ட ஒரு மாநாட்டில் கூறினார்.

இம் மாதம் 12-ந் திகதி அட்டன் இந்து மகா சபையில் நடைபெற்ற இம் மாநாட்டில் 500க்கும் மேற்பட்ட வாலிபர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு தோழர் ஓ. ஏ. இராமையா தலைமை வகித்தார்.

தோழர்கள் ரொசாரியோ, எல்லப்பன், திலகசிரி, மரியதாஸ், தங்கராஜ், இராசலிங்கம் மற்றும் பலர் பேசிய பின், இந்துமகா சமுத்திரத்தில் ஊடுருவியுள்ள அமெரிக்க 7-வது கடற்படைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், 21 கோரிக்கைகள் சம்பந்தமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், அட்டனில் ஒரு சி. டப்ளியு. இ. நிறுவவேண்டுமென்ற கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

<u>மட்டுவில் வடக்கு</u>

## சாவகச்சேரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க ஓராண்டு பூர்த்தி விழா

சாவகச்சேரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க ஆண்டு விழா 18-4-64 சனிக்கிழமை தோழர்கள் ஏ. சாம்பமூர்த்தி, சி.கந்தசாமி, பெ. சுப்பிரமணியம் ஆகிய மூவர் தலைமையில் நடைபெற்றது.

யாழ்-பிரதேச வாலிபர் சங்க செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் மற்றும் வடமாகாண வாலிபர் சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

தோழர்கள் கே. டானியல், பி. கே. ஞனியார், நீர்வை பொன்னையன், வீ. ஏ. கந்தசாமி ஆகியவர்கள் இவ் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

புதிய உத்தியோகஸ்தர்களாக தோழர்கள் ஏ. சாம்பமூர்த்தி தலைவராகவும், ப. கிருஷ்ணன் உப-தலைவராகவும், க. சுப்பையா செயலாளராகவும், சி. கந்தசாமி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். தோழர்கள் சி. சண்முகம், மு. நடேசன், சி, நடராசா, சி. செல்லையா, வெ. யேசுதாசன் ஆகியவர்கள் நிர்வாகக் குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

(நமது நிருபர்)

## சினிமாத் தொழிலாளருக்கு அநீதி

அட்டன் பிரின்ஸெஸ் தியேட்டரில் கடமையாற்றிய சினிமா சங்க உறுப்பினர் தோழர் கெங்கரத்தினத்தை தற்காலிகமாக வேலைநிறுத்தியிருப்பது சம்பந்தமாகவும், தோழர் இயேசுதாசனை கண்டி வேல்ஸ் தியேட்டருக்கு மாற்றியது பற்றியும், அட்டன் லேபர் ஆபிஸில் இம் மாதம் 7-ந் திகதி மாநாடு நடைபெற்றது. சினிமா சங்க உறுப்பினர் தோழர் செனிவிரத்தின அட்டன் மாவட்டப் பிரதிநிதிகள் சத்தியவேல், இராமையா ஆசியோர் இவ் விசாரணையில் கலந்துகொண்டனர். சினிமா தியேட்டர் முதலாளி வடிவேல் அநியாயமாக இத் தொழிலாளர்களை நடத்தியதால், மாநாட்டிலே நியாயமான முடிவுக்கு வராமல் முரட்டுப் பிடிவாதம் செய்ததால் இப் பிரச்சினைகளை கட்டாய மத்தியஸ்தத்திற்கு விடுவதென தீர்மானிக்கப்பட்டது.

## தோட்ட நிர்வாகம் பணிந்தது

தலவாக்கொல்லையைச் சேர்ந்த அக்கரத்தனை பகுதி ராஜபத்தனை (பெல்மோரல்) தோட்டத் தொழிலாளர்கள் இம் மாதம் 8-ந் திகதியன்று வேலைநிறுத்தம் செய்தனர். இத் தோட்டத் தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தையும், இ. தொ. காவையும் சேர்ந்தவர்கள். தோட்டத் துரை பண்டாரநாயகாவின் அட்டகாசத்தை எதிர்த்தும், முள்ளுக்குத்துத் தொழிலாளர்களையும், கொழுந்துத் தொழிலாளர்களையும் தோட்டத் துரை நசுக்குவதை ஆட்சேபித்தும் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். ஐந்து நாட்களுக்குமேல் வேலை நிறுத்தம் தொடர்ந்தது. தோட்ட நிர்வாகம்பணிந்தது. அட்டன் லேபர் ஆபிசில் மாநாடு நடந்தது. தங்கள் கோரிக்கைகளை வெற்றிபெற்றபின் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்றனர்.

# ‘எல்லாம் சண் செயல்’ கூச்சல்

## சரணங்கார சாமியின் ஜன்னிப் பிதற்றல்

## பக்தன் பிரேம்ஜியின் படுபொய்

சென்ற 18-4-64 சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை எழுத்தாளர் சங்கத்தின் ஆண்டு விழாவில், சங்கத்தைச் சீர்குலைக்க திரிபுவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் எடுத்த முயற்சி படுதோல்வி அடைந்ததுடன், அவர்களின் உண்மை உருவமும் அம்பலமாகியது.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள் பலரும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் திரிபுவாதிகள் நடந்துகொண்ட விதம் அருவருக்கத் தக்கதாகவும் கேலிக்கிடமானதாகவும் அமைந்தது. இதில் மிகவும் மோசமானது சரணங்கர சாமியின் ஜன்னிப் பிதற்றலாகும்.

கூட்ட ஆரம்பத்திலேயே, அரசியல் கருத்து வேற்றுமைகளைச் சங்கத்துள் புகுத்துதல் கூடாது என்ற ஓர் தீர்மானத்தையொட்டிப் பேசிய அவர், ‘‘எழுத்தாளர் சங்கத்தின் நடவடிக்கை எல்லாம் சண்செயல்’’ எனவசனத்துக்கு வசனம் பிதற்றி, ‘‘எழுத்தாளர் சங்கம் பக்கம் எடுக்காது நடு நிலைமை வகித்தல் வேண்டும்’’ என கிழடுதட்டிய அரசியல் பொன்மொழி பகர்ந்தார்.

அவரைப் பின்பற்றிப் பேசிய திரு. கே. எம். சிறிசேனு, சூடான் பிரதிநிதியாக சீனத்தில் வாழும் கெயிரை எங்ஙனம் ஏற்றுக்கொள்ள முடியும் என்ற சோவியத் கேள்வியை ஒப்புவித்தார்.

இவர்களின் விஷமத்தனமான கேள்விகளுக்குத் தகுந்த பதில்களைச் சங்கக் காரியதரிசி ரத்தினதேசப்பிரிய சேனநாயகா அளித்தபொழுது ஒன்றுமே கூற முடியாது வாய்மூடி மௌனியாக சாமியும், பக்தன் பிரேம்ஜியும் திகைத்து முழிபிதுங்கியது பரிதாபகரமானது. ரத்ன தேசப்பிரிய சேனநாயகா ஆணி அறைந்தது போல் கூறினர்:

‘‘எமது சங்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பு காலனி, நவீன காலனி முறை எதிர்ப்பு, தேசிய அபிவிருத்தி ஆகிய அடிப்படைக் கொள்கைகள் சிலவற்றுடன் ஆரம்பிக்கப்பட்டது. ரஷ்யாவின் பக்கமா, சீனவின் பக்கமா என்பதல்ல கேள்வி. சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாருக நாங்கள் செயல்பட்டதுண்டா? அதுவேதான் கேள்வியாகவிருக்க முடியும்.

சூடான் பிரதிநிதியைப் பொறுத்த வரையில் அவர் ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் சங்க டஸ்கெண்ட்நாட்களிலிருந்து சூடான் பிரதிநிதியாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயல்பட்டு வருகிறார். செயல் கமிட்டியும், பெரும்பான்மை நாடுகளும், அவரைப் பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டுள்ளன. இந்நிலையில் பெரும்பான்மை முடிவுக்கு எதிராக சீர்குலைவு வேலைகளில் ஈடுபடுகின்றது சோவியத் யூனியன்.’’

இத்தகைய தர்க்கரீதியான பதில் கண்டு திரிபுவாதிகளின் நிலை, குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்ட கதையாக முடிந்தது. திரிபுவாதிகள் இத்துடன் நின்ருர்களா?

உத்தியோகத்தர் தெரிவில் வாலாட்ட முடியாது போகவே செயல் கமிட்டிக்குத் திரு. குமாரலிங்கத்தின் பெயர் (தொழிலாளி ஆசிரியர் குழு உறுப்பினர்) பிரேரிக்கப்பட்டபொழுது, திரிபுவாத ஞானசூனியம் பிரேம்ஜி, அப்படி ஒருவரைத் தனக்குத் தெரியாது என்று கூறியதை நம்பிய திரு. கி. லட்சுமண ஐயர் வேறு பெயரைப் பிரேரித்தார்.

ஆனல் அப்பொழுது, திரு. குமாரலிங்கம் பிரேம்ஜியுடன் மூன்ருண்டு காலமாகத் தேசாபிமானி ஆசிரியர் குழுவிலும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் கடமையாற்றியவர் என்பதும், ஆகவே பிரேம்ஜி அவரைத் தனக்குத் தெரியாது என்று கூறியது படுபொய் என்பதும் விளக்கப்பட்ட பொழுது இத் துணிகரப் பொய்யைக் கண்டு சபையும், லட்சுமண ஐயரும் திடுக்கிட்டனர்.

பிரேம்ஜி இந்த நிலைமையினை எதிர்நோக்குவதற்கு அங்கிருக்கவில்லை. ‘‘எல்லாம் சண் வேலை. சமஷ்டிகளுடன் எனக்கென்ன வேலை’’ என்று கூச்சநாச்சமின்றிக் கூறிச் சென்ற சாமி சரணங்கராவைப் பின்பற்றிச் சென்றுவிட்டார். இவர்களுடன் ஈவா ரணவீரா என்ற பெண்மணியும், திரு, கே.எம்.சிறிசேனுவுமே வெளிச் சென்றனர். மற்றவர்கள் அனைவரும் இவர்களின் வெட்கங்கெட்ட நடத்தையைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்தனர். இவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்று பலரும் கேள்வி எழுப்பினர்.

இக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக வணசுவாமி சீவாலி தேரோவும், செயலாளராக; ரத்ன தேசப்பிரிய சேனநாயக்காவும், உப-தலைவர்களில் ஒருவராகத் திரு. கி. லட்சுமண ஐயரும் உட்படப் புதிய நிர்வாகக் கமிட்டி தெரியப்பட்டது. —(ந.நி)

● —ம 5பக்கத் தொடர்

அமெரிக்காவுக்குச் சவால் விட்டன. அதன் நேச நாடுகளிற் பல வாஷிங்டனின் விருப்பிற்கு எதிராக சோஷலிஸ கியூபாவுடன் வியாபாரம் செய்து வருகின்றன; ‘‘உதவியை’’ நிறுத்துவதென்ற அமெரிக்க மிரட்டல்கள் கூட அவற்றைத் தங்கள் கண்ணேட்டத்தை மாற்றும்படி செய்ய இயலவில்லை.

இந்தப் போக்கு மேற்கு ஐரோப்பாவில் மட்டும் உள்ளதல்ல. கனடாப் பிரதம மந்திரி பியர்சன் அமெரிக்காவிற்கு விஜயம் செய்யுமுன் பாரிஸிற்குச் சென்று ‘‘நாட்டோ’’ மண்டலத்தில் பிரான்ஸின் குரல் சக்திமிக்கதாகவும் தெளிவாகவும் இருந்துவரும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். ஜப்பானுக்கும் கூட ‘‘டி கால் ஜுரம்’’ பாதித்து, அதுவும் பிரான்சுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருக்கிறது.

சுருங்கக் கூறினல், வாஷிங்டன் ஏகாதிபத்திய முகாமில் அதன் நேச நாடுகளால் கைவிட்டு ஒதுக்கப்பட்டு விட்டது. அதன் உலகம் பரந்த ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கை மேலும் அதிகமான பெரிய தோல்விகளை எதிர்ப்பட எதிர்ப்பட, இந்த நேச நாடுகள் தம்மை அமெரிக்க கட்டுப்பாடு, தலையீடு, மிரட்டியுருட்டல் ஆகியவற்ருேடு தம்மை இணைக்கப்படுத்திக் கொள்ள அதிகமதிகமாக மறுக்கின்றன. அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் நிச்சயம் மேலும் பரந்ததாயும் உக்கிரமானதாயும் ஆகவே செய்யும். இருந்தாலும் மிகச் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய நாடு என்ற அளவில் அமெரிக்கா மேற்கு நாடுகளின் கொள்கைகளில் இன்னும் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகிறது. மேலும், ஏகாதிபத்திய உலகின் அடிப்படை நலன்களைப் பாதிக்கும் விஷயங்களில் தாம் எல்லாம் அமெரிக்காவுடன் ஒன்றே என்பதைத் தெளிவாக்கியுள்ளன. எனவேதான் அமெரிக்காவுடனுன போராட்டம் இருக்கவும் ‘‘மேற்கு ஐக்கியம்’’ என்ற கோஷம் எழுகிறது. அத்துடன், முரண்படுபவர்களிடையே சில விஷயங்கள் பற்றிச் சில சமரச ஒருப்பாடுகள் முற்றிலும் சாத்தியமே. ஆகவே, போராட்டம் மேடு பள்ளங்களைக் கொண்டதாக, நெருக்கடிக் காலங்களையும் நெருக்கடி தளரும் காலங்களையும் கொண்டதாகவே இருக்கும். ஆனல், ஏகாதிபத்திய முகாமின் சீரழிதலில், அமெரிக்க-பிரெஞ்சுப் போராட்டத்தைக் கூடுமையமாகக் கொண்டு சக்திகளின் புதிய ரீதியான கூட்டணி அமைப்பு ஏற்படுகிறது என்பது மேலும் மேலும் தெளிவாகி வருகிறது. இந்தப் புனர் கூட்டணி எவ்வாறு உருவெடுக்குப் என்பது பின்னர் தெரியவரவுள்ளது.

## துணிபெற வழிவகை?

இலங்கையில் என்றுமில்லாதவாறு துணிப்பஞ்சம் வந்து பொதுமக்களை வாட்டிக் கொண்டு இருப்பதைச் சகலரும் அறிவர்.

கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா துணிசம்பந்தமாக சில நடவடிக்கைகளை எடுத்து புதுவருடத்திற்காக துணிமணிகள் இறக்குமதி செய்யப்பட்டன. கூப்பனுக்குத் தான் துணிகள் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மக்கள் துணிகள் கிடைக்காமல் போய்விடும் என்று பயந்து, இருந்த துணிகள் எந்த ரகமானுலும் பாராமல் இருந்தவற்றை வாங்கிக் கொண்டனர். நல்ல ரகத் துணிகள், சிறந்த டிசைன்களுடன் இன்று ஏராளமாக வந்துகிடக்கின்றன. இவற்றை வாங்குவதற்கு மக்களிடம் கூப்பன் இல்லை.

இந்தத் துணிகள் மக்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் கடமை. ஆதலால், இன்னுமொரு கூப்பனை துணிகளுக்கு உபயோகிக்க அனுமதித்தல் வேண்டும்.

இப்போது இருக்கும் நல்ல துணிகள் பிழையான முறையில் விநியோகம் செய்யப்படுவதைத் தடை செய்து, மக்களுக்கு கிடைக்கச்செய்ய ஆவன செய்தல் வேண்டும்.

## கம்யூனிஸ்ட் கட்சியை காப்பாற்றுங்கள்

2-ம் பக்கத் தொடர்

இந்த உண்மைகளைப் பார்க்கும் பொழுது, கட்சியின் சேர்மனுன எஸ். ஏ. டாங்கே அவர்மீது கட்சி வைத்திருந்த நம்பிக்கையை அப்பட்டமாக துஷ்பிரயோகம் செய்துவிட்டார் என்பது மட்டுமல்ல; செயற்குழு முழுவதையும் இப் பிரச்சினையில் சிக்க வைத்துள்ளார்.

செயற்குழு, தன்னுடைய அறிக்கையின் மூலம் கட்சி முழுவதையும் இப் பிரச்சினையில் சிக்க வைத்துள்ளது. ‘‘கட்சிக்குள் நடைபெறும் சித்தாந்த அல்லது அரசியல் ஸ்தாபன சர்ச்சைகளில் இப் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறவர்கள் — கட்சியைச் சீர்குலைத்து பிளவுபடுத்தும் நோக்கத்தோடு, வெகுஜன இயக்கத்தை நாசமாக்கும் நோக்கத்தோடும்—பிற்போக்காளர்களின் கைப்பாவைகளாக செயல்படுகிறவர்களாகும்’’ என்று செயற்குழு அறிக்கையின் ஒரு வாசகம் கூறுகிறது.

கட்சி ஸ்தாபனத்தின் பாதுகாப்பு குறித்து உண்மையாகவே கவலைப்படுவதற்குப் பதிலாக மத்திய செயற்குழு ஒரு மோசமான கோஷ்டி மனேபாவத்தில் செயல்படுகிறது. தன்னுடைய குறுகிய நோக்கங்களைச் செயல்படுத்தும் வகையில், டாங்கேயின் இக் கடிதங்களை கட்சியிலுள்ள ஒரு பகுதி கள்ளத்தனமாக உருவாக்கியுள்ளது என்று பொருள் படும்படி பேசி கட்சியின் ஒரு பகுதியினர் மீது வேண்டுமென்றே கெட்ட நோக்கத்துடன் பொய்க் குற்றஞ் சாட்டுவதற்கு செயற்குழு முற்படுகிறது. செயற்குழுவின் இந்த முயற்சி மிகவும் மோசமான தன்மை வாய்ந்ததாகும்.

எஸ். ஏ. டாங்கேக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளை கட்சிக்குள் நடைபெறும் அரசியல் சித்தாந்த சர்ச்சைகளுடன் சேர்த்துப் போட்டு குழப்பக் கூடாது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சாதாரணமான கடமையாகும். கட்சியினுடைய புரட்சிகரமான ஸ்தானத்தின் பந்தோபஸ்தையும், அந்தஸ்தையும் சிறப்பான தன்மையையும் பாதிக்கின்ற ஒரு ஆழமான விஷயமாக டாங்கேயின் இக் கடிதங்கள் விளங்குகின்றன; அந்தக் கண்ணேட்டத்துடன் தான் இப் பிரச்சினையை நாம் அணுகவேண்டும்,

இப் பிரச்சினை பற்றி செயற்குழு விடுத்துள்ள அறிக்கை தான் இது குறித்து இறுதியான முடிவு என்று கருதி அக் கண்ணேட்டத்தில் கட்சி முழுவதையும் பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டாமென்று மக்களின் அன்ருட நலன்களை பாதுகாப்பதற்காக நடைபெறும் போராட்டங்களை நடத்துவதற்கு எல்லா கம்யூனிஸ்ட்டுகளும் தொடர்ந்து பாடுபட வேண்டுமென்றும், இப் பிரச்சினையினல் ஏற்படக்கூடிய குழப்பமும் சோர்வும் நம்முடைய வெகுஜன இயக்க வேலைகளைப் பாதிப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாதென்றும் கம்யூனிஸ்ட்டுகள் அனைவரையும் கேட்டுக் கொள்கிருேம். இப் பிரச்சினை பற்றிய சகல விபரங்களையும் ஒரு பூரணமான அறிக்கையின் மூலம் மத்திய நிர்வாகக் குழு தேசியக் கவுன்சில் ஆகியவற்றிற்கு இடமின்றி விசாரித்து குற்றம்செய்தவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்போமென்று நாங்கள் கூறுகிருேம். வெளியிலுள்ள பிற்போக்குச் சக்திகளிடமிருந்தோ அல்லது கட்சிக்குள் மறைந்துகொண்டிருக்கிற அவர்களது கையாட்களிடமிருந்தோ ஏற்படக் கூடிய சகல பயமுறுத்தல்களையும் எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நலன்களையும் அதனுடைய சிறப்பான தன்மைகளையும் பாதுகாப்பதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உண்மையான அங்கத்தவர்களனைவரும் போராடுவார்களென்று நாங்கள் திடமாக நம்புகிருேம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி‘ கொழும்பு-2